# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

— Page - No - 261.

Acc. No. 18586.

| | | |
|---|---|---|
| மலர் : 8<br>இதழ் : 6<br>விலை அ 4 | துன்முகிஸு புரட்டாசிமீ<br>செப்டம்பர்-அக்டோபர் '56 | வருட<br>சந்தா<br>ரு. 2-4-0 |



கோலக்காவில் சம்பந்தர்க்குத் தாளம் கொடுத்தல்.

பெரியபுராணச் சித்திர விளக்கம் 30. (பக்கம் 265)

# பொருளடக்கம்


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸாத்வீக பூஜை | (திருப்புகழ் மணி) | ... | 241 |
| 2. | வேலின் தனிச்சிறப்பு | (கி. வா. ஜகந்நாதன்) | ... | 243 |
| 3. | ஆதவர் | (ரசபதி) | ... | 246 |
| 4. | அருமருந்து | (ஸ்ரீ வத்ஸ சோமதேவ சர்மா) | ... | 254 |
| 5. | பதினோராந் திருமுறை | (பூ. சமரபுரி முதலியார்) | ... | 256 |
| 6. | அபேதவாதம் | (அ. ராமமூர்த்தி) | ... | 259 |
| 7. | பிறவியின் பயன் | (ஆ. கி. ரங்கராஜன்) | ... | 262 |
| 8. | தாளம் பெற்ற ஞானக் குழந்தை | (கி. வா. ஜ.) | ... | 265 |
| 9. | அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும் | (திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம்பிள்ளை B.A.B.T.,) | | 267 |
| 10. | பழனித் திருப்புகழ் விரிவுரை | (குகஸ்ரீ) | ... | 272 |
| 11. | திருவண்ணாமலை திரு அருணகிரிநாதர் திருவிழா | | | 278 |
| 12. | மதிப்புரை ஆநந்தத் தேன் | | ... | 280 |
| 13. | ஆக்க நோக்கம் | (வா. ராமலிங்கம் பிள்ளை) | ... | 281 |
| 14. | Why am I born | *(Thiruppugal Mani)* | ... | 287 |


---

## அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ˚ முதல் பங்குனி மீ˚ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 9—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினுல், சித்திரைமீ˚ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

| மலர் 8 | துன்முகி ஹு புரட்டாசி மீ<br>செப்டம்பர்-அக்டோபர்—1956 | இதழ் 6 |
|---|---|---|

# ஸாத்வீக பூஜை

(திருப்புகழ் மணி)

ஸ்ரீ க்ருஷ்ண பகவான் கீதையில் பூஜையில் நடத்த வேண்டிய முக்கிய குறிப்புகளை உபதேசிக்கின்றார். நைவேத்யம் செய்து அன்னத்தை விநியோகம் செய்ய வேண்டுமாம். அன்ன விநியோகம் செய்யப்படாத பூஜைகள் பூரண பலனை கொடுக்காதாம். கோவில்களிலும் பஜனை மடங்களிலும் பகவத் பூஜைக்குப் பின்னர், வெகுவாய் வைஷ்ணவ கோவில்களில், ததியோனம் சக்கரைப் பொங்கல் விநியோகம் செய்யப்படுகின்றன. ஸ்ரீ கண்ணன் காட்டிய வழியாகத்தான் இந்த நேர்மை அப்யஸித்து வருகின்றார்கள். அன்னமே ஜீவிதம். அன்னமே ப்ரம்மம். இவ்விதமாய் அன்னத்தை உபநிஷத்துகள் கூறுகின்றன. நவீன காலத்தில் விநியோகம் கூடாதென்றும், நைவேத்யம் செய்வதே ஆண்டவனுடன் வியாபாரம் செய்வதாகும் என்றும் சிலர் சொற்பொழிவு ஆற்றுகின்றார்கள். இது அறிவின்மை. மனம் போல மாங்கல்

மாகேஸ்வர ரான பரிதிமதிக் கன்றளிசெய்
நாகேஸ்வர ஐயா! என்கண்முன் நண்ணுதியோ?

யம் என்றது பழைய ஞானம். பக்தியுடைய மனத்தினர்கள், ஆண்டவனுக்கு அர்ப்பிதம் செய்த உணவுகளை, ஆண்டவன் ரூபமாகக் கருதும் ஜீவராசிகளுக்குக் கொடுத்து அருள் பெறுவதே பூஜையால் பெற வேண்டிய ஒரு முக்கிய பலன். தம் தம் பொருள்களைக் கொஞ்சங் கொஞ்சமாய் ஆண்டவனுக்கு அர்ப்பணம்செய்து பழகி தன்னை அர்ப்பணம் செய்யும் மனம் பெறவேண்டும். தன்னையும் பொருள்கள் யாவற்றையும் அர்ப்பணம் செய்த யோகிகளுக்கு அர்ப்பணம் செய்ய ஒன்றுமே யில்லை. உலக தர்மத்தையும், அதில் நம்பிக்கையையும் ஞானமன்று என்று சொல்லி கெடுக்கலாகாது. இரண்டாவதாக பூஜை பூரணமாய் முடிவு பெற ஏதாவது ஒரு தர்மம் செய்ய வேண்டுமாம். "ஓடியிட்ட பிக்ஷையும் உகந்து செய்த தர்மமும், சாடியிட்ட குதிரை போல தர்மம் வந்து நிற்குமே" என்பது சித்தர்கள் வாக்கியம்.

மூன்றாவதாக ஈஸ்வர ஸ்தோத்திரங்கள் பாடப்பெற வேண்டுமாம். சொல்லினில் ஜோதியுண்டு. அது ஈஸ்வரன் அம்சம். பாராகிப் பண்ணாகிப் பாடலாகி நிற்கின்ற தெய்வத்தைப் பாடி அணுகுவது மிகவும் ஸுலபமாதலால், பூஜை செய்யும்போது ஆண்டவனை வாயார சில பாடல்கள் பாடவேண்டும் என்றார். நான்காவதாக, தாயுமானவர் செய்யும் ஸதாகால பூஜைத் திரமும் பெற வேண்டும். ஆவி நைவேத்யம். ப்ராணன் ஓங்குமதி தூபதீபம். அன்பு அபிஷேக நீர். இப்படிப் பூஜையை நிர்ணயித்தார். சித்தர்கள் சொல்லுவதும் இப்படியே. பூவும் நீரும் என் மனம்; பொருந்து கோவில்என்னுளம்; ஆவியோடு லிங்கமாய் அகண்ட மெங்கும் ஆகுமால்; மேவி நின்ற ஐவரும் விளங்கு தீப தீபமாய், ஆடுகின்ற கூத்தனுர்க்கு அந்தி சந்தி யில்லையே." பூஜையில் தெய்வத்துடன் ஜீவன் உறவாடுவதால், பகிர்முக

---

கடையாம் பழியகற்றிச் சிவலோகம் காணவைத்த
இடைமருதூர் எந்தை எற்கருளல் என்றேயோ

பூஜையும் ஆத்ம பூஜையும் இரண்டும் வேண்டுவதே. ஏனெனில் தெய்வம் எங்கும் நிறைந்து உள்ளும் வெளியுமாய் கலந்திருப்பதால்தான்.

எங்கும் தெய்வம் ஒன்றே என்று உணர்ந்தோர் கட்கு, வெளி முகமாய் பூஜை வேண்டுவதில்லை. ஆத்ம பூஜை ஸதாகால பூஜையாய்விடும்.

---

அநுபூதி விளக்கம்—5.

# வேலின் தனிச் சிறப்பு -11

(கி. வா. ஜகந்நாதன்)

ஆடும் பரியையும் வேலையும் 'அணிசேவலையும் பாடும் பணியை விரும்பினார் அருணகிரிநாதர். மயிலையும் வேலை வம் சேவலையும் இணைத்துப் பாடுவது ஒரு மரபு. தனித் தனியே அவற்றைச் சிறப்பித்து பாடுவதும் முருகன் அடி யார்க்கு வழக்கம். அருணகிரிநாதர் மயிலைத் தனிப் பாட் டுக்களால் கந்தர் அலங்காரத்தில் பாராட்டி யிருக்கிறார்; வேலையும் சேவலையும் பாடியிருக்கிறார். மயில் வகுப்பு, வேல் வகுப்பு என்றும், மயில் விருத்தம், வேல் விருத்தம், சேவல் விருத்தம் என்றும் சில நூல்களை அருளியிருக் கிறார்.

ஆடும் பரியென்று மயிலுக்கு ஆடும் செயலை அடை யாக்கிச் சிறப்பித்தார். மயில் ஆடும்பொழுது அழகும் அருளும் இலங்கும். அணி சேவல் என்று சேவலைப் பாராட்டினார். அணிசெய்யும் சேவல், அழகு தரும் சேவல் என்று பொருள் கொள்ள வேண்டும். வீரம் உடையவ ருக்கு அலங்காரங்கள் பல இருந்தாலும் அவர்களுடைய வெற்றியைக் காட்டும் அணியே மிகச் சிறந்தது. அந்த வெற்றிச் சிறப்பைப் பலருக்கும் எடுத்துக் காட்டும் வகை யில் ஓங்கி நிற்பது கொடி. அதை வெற்றிக்கொடி என்று சொல்லும் வழக்கம் உண்டல்லவா? வெற்றி மிடுக் குடையார் எங்கே சென்றாலும் தம் கொடியை உயர்த்திக் கொண்டு செல்வர். அதனால் அணி சேவல் என்றார்.

---

நன்(கு) உரங்கொள் சுக்ரீவ! நானுளன்நீ வாஎன்ற
தென்குரங் காடுதுறைத் தெய்வமெனை ஏலாதோ

மயிலையும் சேவலையும் அடை மொழிகளால் சிறப்பித்த அருணகிரியார், வேலுக்கு எத்தகைய அடையும் கொடுக்காமல் சொன்னார். அப்படிச் சொல்லுவது முறையா என்ற ஐயம் தோன்றலாம்.

சிறப்புடைய பொருளுக்குப் பல பல அடையாளங்கள் சொல்ல வேண்டியதில்லை. அடை இன்றி வழங்குவதனாலே அப்பொருளின் சிறப்புப் புலப்படும். திருக்கோவையாரின் முதற் பாட்டில் பல மலர்கள் வருகின்றன. அங்கே கோங்கு என்று அடை மொழியின்றிச் சொன்னார் மாணிக்கவாசகர். அங்கே உரைகாரர் கூறுவதை இங்கே தெரிந்து கொள்வது நலம். 'மகளிர்க்கு உறுப்பில் சிறந்த உறுப்பாகிய முலைக்கு உவமையாகப் புணர்க்கப்பட்ட கோங்கிற்கு அடை கொடுக்கக் கடவதன்றோ எனின், அடை கொடுப்பின் பிற உறுப்புகளுடன் இதனையும் ஒப்பித்ததாம். ஆகலான் இதற்கு அடை கொடாமையே முலைக்கு ஏற்றத்தை விளக்கி நின்றது. அது முற்கூறிய வகையில் திருக்கோயில்; திருவாயில், திருவலகு என்ற வற்றிற்கு நாயகராகிய நாயனாரைத் திருநாயனார் என்னாதது போலக் கொள்க.

மயில், வேல், சேவல் என்ற மூன்றிலும் சிறந்தது வேல். அதன் சிறப்புத் தோன்ற அடை இல்லாமல் நடு நாயகமாக வைத்தார். அதற்குள்ள சிறப்புப் பல. முருகப் பெருமானை வணங்குபவர்கள் வேலில் அவனை ஆவாகனம் பண்ணி வழிபடுவார்கள். வேலை மாத்திரம் வைத்து அதையே முருகனாக வழிபடும் திருக்கோயில்களும் உண்டு. பழங்காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் அத்தகைய கோயில் ஒன்று இருந்தது. அதை இளங்கோவடிகள் "வேற்கோட்டம்" என்று சிலப்பதிகாரத்தில் குறிப்பிடுகிறார். யாழ்ப்பாணத்தில் செல்வச் சந்நிதி என்ற திருக்கோயிலில் வேலையே முருகனாகக் கொண்டு வழிபடுகிறார்கள். முருகனுக்கு ஆறுமுகம் இருப்பதுபோல வேலுக்கும் ஆறு பட்டைகள் உண்டு. முருகப்பெருமான் திருவுருவத்தையும், அவன் பால் சார்த்தியிருக்கும் வேலையும் தரிசிக்கும்போது

---

சீலத் தொடுவருணன் சிறக்க வழிகாட்டும்
நீலக் குடியாய் என்தாபம் நீக்குதியோ

கவனித்தால், அது அவன் அடியையும் கரத்தையும் தொட்டுக்கொண்டு முடியளவும் செல்வதைக் காணலாம். வேலை அடி முதல் முடிவரையில் கண்ணை யோட்டித் தரிசித்தால் முருகனையும் அடிமுதல் முடிவரையில் தரிசித்து விடலாம்.

வேல் ஞானமே உருவாகப் பெற்றது. ஞானசக்தி என்ற பெயருடையது. பராசக்தியின் வழங்கப் பெற்றது. சக்தி அம்சமுடையது. இத்தனை வகையாலும் அதற்கு அமைந்த சிறப்புக்களை எண்ணியே அடை மொழியின்றி வேல் என்று மாத்திரம் சொன்னார் அருணகிரியார்.

"ஆடும் பரி எனவும் வேல் எனவும் அணி சேவல் எனவும் பாடும் பணியையே என் வாழ்க்கைப் பணியாக அருள் செய்யவேண்டும்" என்று பிரார்த்தனை செய்தார் அவர்.

பாடும் பணியைப் பெரிய பணியாகக் கொண்டே பெருமக்கள் தமிழ் நாட்டில் பலர் இருந்தார்கள். ஞானசம்பந்தர் முதலிய நால்வரும் பன்னிரண்டு ஆழ்வாரும் அந்தக் கூட்டத்தைச் சார்ந்தவர்கள்.

"அர்ச்சனை பாட்டே யாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார்
தூமறை பாடும் வாயார்"

என்று இறைவன் பணித்ததைச் சேக்கிழார் பாடுகிறார். இறைவனுக்குப் பூவால் அர்ச்சனை செய்வதை விடப் பாவால் அர்ச்சனை செய்வது சிறந்தது என்பதை மேலே சொன்ன பெரியார்கள் புலப்படுத்தி யிருக்கிறார்கள்.

அருணகிரிநாதர் பாடும் பணியை வேண்டிப் பெற்றவர்; பிறர் செய்த வழியே போகாமல் புதிய துறையில் சந்தக் கவிமாரி பொழிந்தவர் அவர். பல பாக்களைப் பாடிய பின்பு பாடியது கந்தர் அநுபூதி. அவ்வளவு பாடியும் அவருக்கு மன நிறைவு உண்டாகவில்லை. மீண்டும், "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்று வேண்டுகிறார்.

---

முருகனடியார்—18.

# ஆதவர்
## (ரசபதி)

க்ஷேத்ரம் தருவது சேதுதலம். கடலில் அணை கட்ட, இராமன் சென்ற வழி இன்றளவும் துளசிமணம் என்று, அத்தலத்தைப் பாடி மகிழ்கிறது பாரதம். அதன் அருகில் உளது, முனிவர் போற்றும் முதுகுளத்தூர்.

அப்பதியில் ஒரு அறிஞர்; முற்றும் துறந்த முனிவர்; அவர் பெயர் ஆதவர். வேலே விளங்கு கையானை, மயிலூரும் மணியை மனங்கொண்டு, முருகா முருகா என்று வண்ணம் பாடுவது அவர் வழக்கம். உள்ளம் உருகி, அவர் ஓதிய நூறு பாடல் கொண்ட திருமலை முருகன் மணங்கமழ் மாலை, இன்றும் பலர் நினைவில் இருக்கின்றது. இதனால், திருவருள் விலாசம் இவரிடம் திகழ்ந்து இருந்தது.

அகத்தியர் அரும்பதி என்னும் நினைவால், புனித பொதிகைக்குப் போய்ப் போய் வருவார். கற்றவர் பலர், அவரைச் சுற்றியிருந்தனர். செல்வம் பெற்றவர், வித்தக ஆசியை விரும்பி, அவர்க்குச் சிறக்கப் பொருள் உதவி செய்வது உண்டு. பரிவொடு வந்த பணத்தைப் பாவலர்க்கே தருவார். என்றும் பணம் வரும்; வந்ததும் கைமாறும்; அந்த வகையில், அவர் என்றும் செல்வர்; என்றும் ஏழ்மைதான்.

அவருடைய பூர்வாஸ்ரமத்தில், உதவாக்கரை யென்று அவரை உதறிய உறவினர், இன்றைய சூழ்நிலையை யெண்ணி, பல முறையில் பந்துத்வம் கூறி, முன்னிடத்தில் வந்து மொய்த்தனர். அச்சூழ்நிலை, ஆதவர் மனத்தை அரித்தது.

அடடா! சுற்றம் பந்தம் கொண்டு, என் மனம் ஏன் இப்படிச் சுழல்கிறது. இனி யிங்கிருப்பது பிழை யென்று எழுந்தார். ஒருவர் கண்ணிற்கும் அகப்படாமல், ஓர் நாள் இரவு, ஊரை விட்டே புறப்பட்டார்,

போகிறார். அதோ போய்க் கொண்டே யிருக்கிறார். சென்ற இடமெல்லாம், கோலம் கண்டு கும்பிடுகின்றார்கள் பலர். எந்த இடமும் அவர் சொந்த இடம். அவர் வாய் திறந்தால் போதும். நியதியாக எப்பணியும் நிறைவேறுகின்றது.

நீறணிந்த மேனி. உருத்திராக்க தாரணம். காஷாயம்; பார்க்கும் கண்கட்குச் சிவப் பழம் என்று பாராட்டுகின்றார் பலர்.

---

வல்ல அடியர்பலர் வாழ்த்தநடம் காட்டுதிரு
நல்லம் உவந்தாய்! யானுவக்க நண்ணாயோ

இவர்க்குப் பணி செய்தால், செல்வம் சிறக்கும்; குழந்தை பிறக்கும்; தீரா நோய் தீரும்; இப்படி ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு எண்ணம். இப்படிப் பயன் கருதும் மக்களைப் பார்த்து, இடிந்தது ஆதவர் இதயம்.

இனி, ஒரு நாள் தங்கிய ஊரில், அடுத்த நாள் இருப்பது கூடாது. எவர் அழைத்தாலும், விருந்திற்கென்று எவருடைய வீட்டிலும் நுழைவது ஆகாது என்ற தீர்மானம் கொண்டார். பசியெடுத்தால், வாசற் படிகடந்து வருகின்ற பிட்சையை வாங்குவார்; செல்லும் இடமெல்லாம் சேந்தன் மேல் பாடுவார்; இது அவரது இன்றைய நிலை.

தென்காசி யென்பது, பாண்டி நாட்டில் உள்ள ஒரு பழம் பதி. அதன் அருகில், சுரண்டை என்று ஒரு சிற்றூர். சொற் கொண்ட பாடல் சுவையறிவார், அக்கிராமத்தில் சிலர் இருந்தனர். அதனால், அவ்வூர்க்கு மட்டும் அடிக்கடி செல்வார். அங்கு இருப்பாருடன் அளவளாவுவார். அங்கும் தங்குவது ஓர் இரவுதான். இன்றும் வைகறை வேளையில், தென்காசிப் பெருமானை வழிபட்டு, வாழும் சுரண்டையூரில் வந்திருக்கிறார்.

அநித்தியமான பயனை அதிகம் விரும்பி, சிறு தெய்வ வழிபாடு செய்வாரும் உண்டு. அவர்களுள் சிலர், வாய்த்த மாந்திரிக நூலின் வழி நிற்பர். உருத்து அளவாக உருவேற்றுவர். கூடும் அளவு உழைத்துக் கூலி பெறும் ஏழைகள்போல், அற்பப் பயனை அடைவது அவர்கள் நிலை.

அவர்களுள் ஒருவன் அவ்வூரில் இருந்தான்; கடுமையான சாதனையில் இவன் கைதேர்ந்தவன். தமக்கு ஆகாதவர் வீட்டை எரிக்க வேண்டுமா; வைக்கோல் போரைக் கொளுத்த வேண்டுமா; வாயிலும் மூக்கிலும் ரத்தம் கக்க வேண்டுமா; அகால மரணமா; ஆ! ஐயோ! சொன்னால் போதும்; பெரும் பாவம் என்று பின் வாங்காதவன் அப் பேதை. தாழ்ந்த மன நிலையர் சிலர், வீணாக அவன் சார்பை விரும்பினர். பண்புடைய ஊரவரில் பலர், அவனைப் பார்க்கவே அஞ்சுவர்.

அவன் என் பங்காளி. தாராளமான என் வளர்ச்சி, அவனால் தடைப்படுகின்றது. அதனால் இரவும் பகலும் நித்திரை யில்லை. விரைவில் அவனை ஒழிக்க வேண்டும். என்ன கேட்டாலும் தருகிறேன் என்றான் ஒருவன். அட பாவமே! அதைச் சொல்லி, வெண்பொன் காசு வேண்டிய அளவு கொடுத்தான். மதிகெட்ட மாந்திரிகன், உடனே அதற்கு உடன்பட்டு, பயங்கர செயலில் இறங்கினன்.

---

ஏழம்பச் சந்தன் எய்சாபம் தீர்த்ததிருக்
கோழம்பக் கோவே!என் கோள்சேட்டை தீராயோ

சில நாட்களாக, உக்கிரமான மந்திர சாதனை, உறும் உறும் என்று உறுத்து நடைபெறுகின்றது.

சுரண்டையூரில், கற்றவருடன் நெடுநேரம் ஆதவர் கலந்து மகிழ்ந்தார். உச்சி வேளை. கடும்பசி காதடைத்தது. பிச்சைக்குப் புறப்பட்டார். கடுமை வெய்யில் காய்கிறது. கால் கொப்புளிக்கிறது. புழுவாய்த் துடித்தார் புலவர்.

எதிரில் ஒரு குடிசை. ஆம். அதுதான் மந்திரவாதியின் வாசஸ்தலம். அநியாயக்காரன் வீடு அது என்று அறியாத ஆதவர், தகிக்கும் வெய்யிலைத் தாங்க முடியாமல், அதனுள் விரைந்து நுழைந்தார். பார்வைக்கு எதிரில் இருந்தது ஒரு பலகை.

முருகா! அப்பா! என்று அதன் மேல் அமர்ந்தார். அவ்வளவுதான்.

ஆ! ஹா! என்று அலறினன் மந்திரவாதி.

என்ன ஐயா! ஏன் இப்படிக் கதறுகிறீர்?

ஏய்! கதறுகிறேனா? இன்று இரவு கதறப் போகிறவன் நீயடா! அது யந்திர ஸ்தாபனம் செய்திருக்கும் பலகை! இன்னும் அதன்மேல் இருக்கின்றாயேடா!

அதிர்ந்தது மனம் ஆதவர்க்கு. அப்படியா என்று பதைத்துத் துடித்து எழுந்தார். உறுத்த வெய்யில் பொறுது உள் நுழைந்தேன்! ஏதோ ஒரு மணை யென்று எண்ணினேன். ஐயா! என்னை மன்னித்துவிடும் என்று கெஞ்சினார்.

மன்னிப்பதா! நானா? மனிதனா நீ? துறந்தவனுக்குத் தேகாபிமானமோ? கால் கொப்புளித்ததாம் கால்! காஷாயம் கட்டிய உங்களை யெல்லாம், கட்டிச் சுருட்டிக் கடலில் அல்லவா போட வேண்டும்!

அன்பரே! என்போன்றவர், பொங்கிய வெய்யிலைப் பொருட்படுத்தக் கூடாதுதான். இன்று முதல் தங்கள் உபதேசத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன்!

கிண்டலா செய்கிறாய்! பாரடா! நீ வேண்டுமானால் பார்! இந்த மணைமேல் இருந்த நீ, இன்றே மரணம் அடைவை! போடா! போ! ஒழிந்து போ என்று நெட்டித் தள்ளினன். ஆ! ஆ! தட்டுத் தடுமாறி, ஆதவர் வீதியில் வந்து வீழ்ந்தார்.

இதயம் நொந்தது. இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களே என்று எண்ணி யெழுந்தார். திரும்பிக்கூட பார்க்காமல், சிந்தனை சிலிர்க்க, அதோ போகிறார் பாருங்கள்!

மந்திரவாதி வீடு என்று தெரிந்திருந்தால், இவன் வீட்டில் நுழைந்திருக்கவே மாட்டேன். இன்றே மரணம் என்றானே!

---

**தீரா வடுவகற்றும் திருமந்த்ர மூலர்வாழ்**
**சீரா வடுதுறையெம் செல்வம்சேர்ந் துய்வேனே**

ஆரண மந்திரங்களை, மாரணத்திற்குப் பயன்படுத்தும் இது அக்கிரமம். என்ன செய்வது? உலகத்தைத் திருத்த நம்மால் முடியுமா?

*சமராயின் அங்கருளால் வேல்கொண்டு சார்ந்து*
*தமராயி ருர்க்கருள்செய் தற்பரா சிற்பரனே!*
*அமரா வதிக்கரசின் அன்பார் அகமுகனே*
*குமரா! எனையாள், குகநின் அடைக்கலமே!!*

என்று வழுத்தியது அவர் வாய். நம்பன் கோயில் நோக்கிக் கால்கள் நடக்கின்றன. பசி தணிக்க, குளத்து நீரை வாரிக் குடித்தார். கோபுர வாயிலில் அமர்ந்து, எங்கும் இருப்பானை யெண்ணி யிருந்தார். மாலை மணி நான்கு. பக்தர்கள் பலர், பரமன் கோயிலுக்கு வருகின்றனர். அவர்களுள் சிலர், ஆத்வரை நன்கு அறிந்துளர்.

ஸ்வாமி! என்ன முக வாட்டம்? என்று நெருங்கி வணங்கி வினவினர்.

இன்று பகல், இவ்வீதியின் கோடியில் இருக்கும் மந்திரவாதி வீட்டுள் நுழைந்தேன்......

அடடா! தாங்கள் அங்குச் சென்றது தகுதி யல்லவே!

என்னமோ போகும்படி நேரிட்டது. அவனே, நீ இன்றே மரணம் அடைவாய் என்றான்......

ஐயோ! நச்சுப் பல்லன் அப்படியா சொன்னான்?

அதற்கு அஞ்சவில்லை. மட்டரகமான மந்திரவாதி வாக்கால் மரணமானால், நான் வழிபடும் நம்பன் ஏன் காக்கவில்லை என்று, பாமர மக்கள், எள்ளி நகை செய்வரே என்ற ஏக்கமன்றி வேறில்லை.

கசிந்த மனப் பக்தர்கள் கண் கலங்கினர். செய்வது அறியாமல் திகைத்தனர்.

உம்...இருக்கட்டும். திடீர் வெள்ளத்தை அணையிட்டுத் தடுக்க யாராலே ஆகும்? மரணத்தின் பின், என் உடலை மந்திரவாதி கண்கள் காண விரும்பவில்லை மனம். இன்று இரவு மயானத்தில் இருக்கிறேன். பொழுது விடிந்ததும், உங்களுள் யாரேனும் ஒருவர், தடைபடாமல் என் உடலைத் தகனம் செய்துவிட்டால் போதும். எவரும் இதை யறியாதபடி செய்துவிட வேண்டும். இந்த உதவியை நீங்கள் செய்யத்தான் வேண்டும்.

என்ன இது? ஏன் இப்படி வருந்துகிறீர்கள்? இறைவன் திருவருளை எவர் அறிவர்? இன்பம் துன்பம் இரண்டையும், வாழ்க்கையில் என்றும் எதிர்பார்த்தே இருக்க வேண்டும்!

---

**வருத்தும் பிணிதவிர்த்துச் சுந்தரரை வாழ்வித்த**
**திருத்துருத்தி சேவித்துச் சென்மவினை தீரேனே**

**தன் கடன் அடியேனையும் தாங்குதல்** என்ற தமிழ் மறையும் பொய்க்குமா ஸ்வாமி!

அது வாய்மை யுரை. **என் கடன் பணிசெய்து கிடப்பதே** என்பது அதன் இறுதியடி. அதனில் உள்ளபடி, அறுபது நாழிகையும் அத்தனுக்கே நம்மை அர்ப்பணித்தோமா என்ன? சிறிது நேரம் அவன் சிந்தனை. அதுவும் பயனைக் கருதித்தானே? சீச்சீ. கூலிக்கு மாரடிக்கும் கூத்தாவது கூடாது வழிபாடு; சொன்னபடி செய்யுங்கள்! வருகிறேன் என்று எழுந்தார். விரைந்து நடந்தார்.

அந்தி வேளை. ஊர்க்கோடியில் சுடலை. அவர் சென்ற நேரத்தில் எவரும் அங்கு இல்லை. படர்ந்த செடிகளில் உள்ள தளிர்களைப் பறித்தார். பரப்பினார். அதன் மேல் அமர்ந்தார். ஆறுமுகம் ஆறுமுகம் என்று உதடுகள் அலறின.

மந்திரவாதியின் மனம்போல், வரவர இருள் வளர்ந்தது. அறியாமை யிருளை யழிக்க, மயிலேறுவான் மலரடியை, உருகி உணர்கிறது உள்ளம். பொன்னான மேனி, இனி மயான மண்ணாகி மறையும் என்பதைக் கருதியபோது, கலகலவென்று சிந்தியது கண்ணீர். ஒவ்வொரு விநாடியும், இறுதி நெருங்குவதாக உணர்கிறார். குழம்பிப் புரள்கிறது குடல்.

ஓம் சரவணபவாய நம: ஆம். அரிய தெய்வ எழுத்து இவைகளை, இதயம் அதிர உருவேற்றியபடியே இருக்கிறார்.

இரவு மணி பன்னிரண்டு. கொள்ளிக்கும் விள்ளாத கூரிருள். ஆ! என்ன வியப்பு! பட்டப் பகல்போல் ஒளி பரப்பும், வட்டம் ஒன்று சுழன்று வருகிறது. அச்சம் அதிகரித்தது. முருகா! முருகா! என்று மொழிந்தது வாய்.

உருண்டு வந்த ஒளி நடுவில், திடீரென்று அச்சம் அகற்றும் அயில்வேல் ஒன்று, குதித்து எழுந்து கூத்தாடியது. அதன் பக்கத்தில், பார்க்க மகிழ்ச்சி தரும் பச்சை மயில் ஒன்று, தோகையை விரித்து, சிறக்க நிருத்தம் செய்தது.

கண்ட புலவர் கண்கள் களித்தன. கைகள் குவிந்தன. எழுந்திருக்கவே முடியவில்லை. ஏதோ ஒரு பாரம் தன்னை அழுத்தியிருக்கிறது. வாளா இருக்க முடியவில்லையே!

என்னே கருணை இறைமை தருமயிலே
என்னே ரகுவேலே எளிய அடியேன்முன்
பொன்னே யெனமிளிர்ந்து போந்தபயம் தீர
மன்னே இனிதேவ வந்தீர்க் கடைக்கலமே!
மன்னுமயில் வாழி வரதன்கை வேலேவுன்
பொன்னூர் அருள்வாழி போற்றியோ நற்கருணை

---

**வேதம் பூசிக்க வியன்மகிமை தந்தளங்கள்**
**நாதன் அழுந்தூரில் நானழுந்தி வாழ்வேனே**

*என்னை இறைசெயலென் றென்றென்றும் வாழ்த்த*
*அன்னை எனவாம் அன்பிற் கடைக்கலமே!*
*வாழி யிறைகருணை ஓங்காரம் வாழி*
*வாழி அருளவரும் மாமயில்வேல் வாழி*
*ஆழி யெனமின்னி அருள்கின்ற உம்மருட்கே*
*ஏழை யடியேன் என்றும் அடைக்கலமே!*

என்று படபடத்த இதயத்தோடு பாடியது அவர் வாய். தவம் தழைத்தார்க்கு அருள்செய் தனிவேலும் மயிலும், பவம் தழைத்த எனைக் காக்க மிகப் பரிந்து வந்தனவோ என்று, குளுகுளுத்த அன்புடன் கும்பிட்டார். எவர்க்கும் கிட்டாத இச்சேவை, எளியேற்குக் கிட்டியது இனி யிந்தத் தேகம் யாதாயினும் ஆக என்று, துணிந்தது புலவர் தூய மனம்.

எற்ற்ற்! எற்ற்ற்!! எற்ற்ற்!!! என்ற அதி பயங்கர ஒலி எழுந்தது. அதனால் வனமே அதிர்ந்தது. ஐயோ என்ன இது? ஆம். பனைமரம் போல் ஒரு பேய்; அதன் கையில் ஒரு தண்டு. என்ன விகாரமான தோற்றம்?

காணவே கண்கள் கூசின. புலவர், முகிழ்த்த கண்களை மூடினார். முருக முருக முருகா அ அ அ! உதடுகள் துடித்தன. வெடவெட என்று உடல் ஆடியது.

என்ன ஆச்சர்யம்! அதோ, அதோ, மேல் வந்து மோதியது வேல். அவ்வளவுதான். இரு துண்டாய் விழுந்தது பேயுடல். அத் துண்டங்களை விழுங்கியது தோகை மயில். புலவர் விழிகளுக்கு, பூமியே சுழல்வதுபோல் ஒரு தோற்றம்......

ஆ! இது என்ன? மற்றொரு பேய். முன்னையதைவிட, இது மிகப் பெரியது

அடேய்! அடேய்! விடுவேனோ உன்னை? விழுங்குகிறேன்! என்னை மறுப்பவர் எவரேடா! ம்...ம்...ம் என்று அணுகுவதை அறிந்தார். வாயா, அது பிலத்துவாரமா? என்ன கோரமான சொரூபம் ? அதிர வரும் அதைக் கண்டு, உதற லெடுத்தது உடல்.

கண்களை இறுக மூடினர் கவிஞர். வாய் மட்டும், வேலும் மயிலும் துணை; வேலுமயிலுந் துணை என்று விறுவிறுத்தது.

படேர் என்ற ஓசை. ஆம். ஆம். வேலின் உக்ர வேகத்தில் அதுவும் வீழ்ந்தது அடுத்து அடுத்து. ஆ! ஹா!! எங்கிருந்து வருகிறதோ இப் பேய்ப் பட்டாளங்கள்?

திமு திமு என்று ஒன்றன்பின் ஒன்றாய், முன்னேறி, அவைகள் உருத்து வந்து மொய்த்தன.

படீர்! படேல்!! மடார்! மடேல்!! அதி பயங்கர நிலை. வீர வேல், உக்ரம் கொண்டு விறுவிறுத்ததன் விளைவு இது. வந்தவை

---

**வாயூர அள்ளூர மாதேவி பூசித்த**
**மாயூரா! என்பாவம் மாய அருளுதியோ**

யெல்லாம் நொந்து விழுந்தன. மாபெரும் மயூரதேவர், விரைந்து பறந்து விழுக்குகிறார். அவ்வளவுதான்.

கோ கோ கொக்காக் கோ என்று, குதித்து எழுந்த சேவல் ஒன்று கொக்கரித்தது. மயிலும் வேலும் உடனே மறைந்தன.

தொல்லை தொலைந்தது. வைகறை வந்தது. வேர்த்துக் கொட்டியது புலவர் உடல்.

*காக்கக் கடவியநீ காவா(து) இருந்தக்கால்*
*ஆர்க்குப் பரமாம் அறுமுகவா—பூக்கும்*
*கடம்பா முருகா கதிர்வேலா! நல்ல*
*இடங்காண் இரங்காய் இனி!!*

எனும் பழைய பாடல், மனத்தில் மின்னி மறைந்தது.

புலவர் மயானத்தை விட்டுப் புறப்பட்டார். கடனை முடித்தார். சுரண்டையூரில் உள்ள அநுமந்தப் பொய்கையில், நீராடினார். அனுஷ்டித்தார். புலபுல என்று பொழுது புலருமுன், ஊருள் புகுந்தார். எதிர்ப்பட்ட வீட்டுத் திண்ணை ஒன்றில் ஏறியிருந்தார்.

போய்ப் போய், ஆதவரை எதிர்த்தானே அறிவிலி, அரம் பாடி, அவர் இவனை அழித்திருக்கிறார். சும்மாவா சுடுகாட்டிற்குப் போனார். அங்குப் போய் என்னமோ செய்திருக்கிறார்......

இப்படிப் பலவிதமாக ஊரார் பேசுவது, பாவலர் காதில் விழுகிறது.

அரம் பாடுவதா? அந்தப் பாவத்தை நான் ஒருநாளும் செய்ததில்லையே! என்னிடத்தில் என்றும் அந்நினைவு எழுந்ததே இல்லையே! ஒன்று கிடக்க ஒன்று பேசும் இந்த உலகம். எல்லாம் தேவயானையார் மணாளன் திருவிளையாடல்; யாரே அறிவார் அவன் பெருமை! என்று எண்ணும் போதே, புனித கண்மழை பொழிந்தது. எழுந்தார். விரைந்து நடந்தார்.

ஓம் ஓம் என்று ஒலித்தது கோயில் மணி. இனிய அந் நாதம், தன்னை இனிது வரவேற்பது போல இருந்தது. புளகித்தது மேனி. முருகா முருகா முருகா என்று கோயிலுக்குள் புகுந்தார்.

எண்ணினரைக் காக்க, எளியவரை ஏற்க, எளிது உதவும் ஓம் பொருளோன் திருவருளை உணர்ந்து, தொழுதகை தலைமேல் ஏற, துளும்பு கண்ணீருள் மூழ்கி அழுதார்; தொழுதார்.

வேல் இறைவா! மயில் மழவா! குயில் இரு புறமுள குமரேசா! இதய குகையில் இருக்கின்றாய். புறத்திலும் உருவாகிப் பொலிகின்றாய். அடியவர் துன்பம் துடைக்கின்றாய். பிரபோ! எளிய

---

**வளமலரால் அர்ச்சித்து வாழ்விந்தர்க் கன்றருள்செய்**
**விள நகரன், அடிமலரை யென்முடியில் வையாளே**

என் பொருட்டு மந்திரவாதி இடர் அடைவதோ? பெரும் சாந்தி யடைய, அந்த ஆன்மாவிற்கு அருள்! என்று பிரார்த்தித்தார்.

இரண்டொருவர் நீங்கலாக, அன்று எவரும் அவரை யறிந்திலர். அந்த ஊரை விட்டே அகன்றார். உணவு கருதி, இனிமேல் பிட்சைக்கும் செல்வதில்லை. செவ்வேள் ஆண்டவன் திருவருளின் படி ஆக என்று, மாபெரும் தீர்மானம் கொண்டது மனம்.

காலையில் தென்காசி. கட்டுச்சியில் சங்கர நாராயணர் கோயில். மாலையில் கரிவலம்வந்த நல்லூர். அன்று இரவு, புனித திருக்கோயிலுள் புகுந்தார். வரத குமரனை வழிபட்டார். இரவு மணி பத்து. பக்கத்து சத்திரத்தில் வந்து படுத்தார். நேற்றுப் பகலி விருந்து உணவில்லை. காதடைத்தது. கண்ணிருண்டது.

இது சோற்றால் அடைத்த சுவர். சொன்னால் கேட்காது வயிறு. இப்படித்தான் பாதிக்கும் என்று வாளா இருந்தார்.

* * *

யார் ஐயா அது? குளுகுளு என்று இருந்தது குரல். சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல் இருக்கிறது; வேண்டுமா? என்று ஏந்திய கைத் தட்டுடன் எதிர் வந்தாள் ஒரு அம்மை.

தாயே! தாங்கள் யார்? என் அன்னை வள்ளி யம்மையா?

அடடா! வடை பொங்கல் அளிப்பார் எல்லாம், உமக்கு வள்ளி யம்மையாகத் தோன்றுமோ? அப்படித்தான் இருக்கட்டுமே. பரமன் கோயிலில் உம்மைப் பார்த்தேன். கொடுக்க வேண்டும் என்று தோன்றியது; கொண்டு வந்தேன் என்று கொடுத்தாள்.

வாயும் கையும் அலம்பினர். வயிறு நிறைய உண்டார். தேவாமிர்தமாக இருந்தது.

போய் வருகிறேன் என்று, புன்னகை செய்தார் பூவையார். நொடி யளவு நேரந்தான். எல்லாம் இந்திர ஜால வித்தைபோல இருந்தது. உருகியது உள்ளம்.

> **வேலும் மயிலும் துணைசெய்ய வேதனைபோம்**
> **ஆலும் பசிவந்தால் அன்னை—பாலுளாள்**
> **என்றும் குறையில்லை ஏத்துமினோ தொண்டீர்!**
> **பொன்றும் இருள் பிறவி போம்**

என்று படபடத்து வாய் பாடியது. இப்படியே செல்லும் இடமெல்லாம் சேந்தனையே பாடினர். எவ்வெம் முகமாகவோ, உரிய காலத்தில் உணவை முருகன் உதவினன். இவைகளை உணரவே நம் உள்ளம் உருகுகிறதே!

எம்மான் திருவருள் என்றும் நம்மில் இருக்கிறது. வாழ்நாளை வாழ்நா ளாக்குங்கள்! பயனைக் கருதிப் பாழ்படுத்

---

தாதீர்கள்! நம்புங்கள் நம்பனை! வேலுண்டு வினையில்லை! மயிலுண்டு பயமில்லை என்று, வீறு கொண்டு ஆதவர் எங்கும் பல விரிவுரைகள் ஆற்றினர்.

பல காலம் இங்ஙனம் ஆறுமுகன் வழிபாட்டிற்கே தன்னை அர்ப்பணித்த ஆதவரை, ஸ்ரீ வல்லீ மணாளன், ஸ்ரீ தேவகுஞ்சரியை யிடங்கொண்டோன், மயிலேறிய வேலிறைவன், ஒரு விசாக புண்ணிய நாளில், அருள்கொண்டு வருக என்று அழைத்தான். அன்று முதல் இன்றும் ஆதவர், எம்மான் சந்நிதியில் இன்பமார்ந்து இருக்கின்றார்.

வாழ்க அப்பெருந்தகை!
வாழ்க முருகன் அடியவர்!

---

# அருமருந்து

## (ஸ்ரீ வத்ஸ சோமதேவ சர்மா)

அது ஓர் தனி மருந்து! அம்பலத்தே கண்டதல்ல! எங்கும் காணும் மருந்து! ஆனாலது பலர்க்கும் கிடைப்பதில்லை! நாடித் தேடி ஓடி அலைபவர்க்கே கிடைக்கும்! யார் கண்ட மருந்து? எந்த நோய்க்கு மருந்து?

மாதரசி மதாலஸை கண்ட மருந்து!

எல்லா நோய்களையு மகற்றும் மருந்து!!

நோயில் சிறந்தது ஸம்ஸார நோய்! நீண்ட காலத்திய நோய் அது! எம்மருந்தாலும் அகலாத நோயது! உடன் பிறந்து வதைக்கும் நோயது! பொறுக்கொணாத பல துன்பங்களைத் தரும் நோயது.

அது எதனால் உண்டாகிறது? பற்றினால்தான் தோன்றுகின்றதென்கிறார் கீதையைப் படைத்த பிரும்மன். பற்றே ஸங்கமாம்! ஸங்கத்தால் காமம்! காமத்தால் மோகம்! மோகத்தால் நினைவு தடுமாற்றம்! அதனால் புத்தி அழியும்! புத்தி அழிந்தால் நாசமே!! ஆதலால் துன்பம் நீங்க பற்றை விடு என்றார்.

"அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பது தென் மொழியில் கண்ட பழமொழி!

---

முன்புள்ளிப் போற்றும் குபேரற்கு முன்வரும்செம்
பொன்பள்ளி மெய்ப்பொருளைப்போற்றுநிலை எற்குறுமோ

உலகில் உள்ளவர் பற்றை விடுவது ஸாத்யமா! "பற்றை விட முடியாமல் ஸத்துக்களிடம் பற்று வை. அது ஓர் அரு மருந்து" என மைந்தன் அலர்க்கனுக்குக் கூறினுள் தாய் மதாலஸை!

மருந்தை உண்டவுடன் நோய் அகலும். நோயகல்வதே ஆரோக்யம்! ஆரோக்யமே இன்பந் தரும்.

"பெரும் புண்யம் செய்தாலன்றி ஸத்ஸங்கம் கிட்டாதே"ன வாடாமொழிப் புலவர் பவபூதி கூறினுர். ஆகஸ்ட் 15 ல பலரது புண்ணியம் உருண்டு திரண்டு ஒன்று கூடியது. எங்கே? அருணகிரிநாதர் அருள் பெற்ற அண்ணுமலையிலே! சிவன் ஜோதி மயமாய் நின்ற கார்த்திகைத் திருநாளில்தான் அங்கு இக்கூட்டத்தைக் காணலாம். ஆடியிலே மாபெருங் கூட்டம் கூடும். அன்று அருணகிரியைக் காணவே கூட்டம் கூடிற்று! அவரது அருள்பா சொற் கேட்கவே கூடிற்று! கதிரவனும் கருணை புரிந்தான்.

சென்னையிலிருந்து திருமுருகாற்றுப் படைகளின் திருநாமங்களைத் தாங்கிய ஆறு பஸ்ஸுகள் கிளம்பின. அது நேரே குமரபுரம் அழைத்துச் செல்வதுபோ லிருந்தது! வழியெல்லாம் இறைவன் நாமாவை வாரி இறைத்துச் சென்றது. முருகா என்ற ஒலி முழக்கம் வானளாவிச் சென்றது! வண்டியிலுள்ளோர் ஊரை மறந்தனர். உத்யோகத்தை மறந்தனர்! உடலை மறந்தனர்! ஒரே நாமாவளி!! சிறுவர்களையும் பெண்மக்களையும் ஆட்கொண்டது முருகன் நாமம். என்னே பக்தி! என்னே பரவசம்!

வல்லாள ராஜன் கோபுரம் முதல் உள் கோபுரம் வரை ஒரே பக்தர் குழாம்! அடியாரைக் காண வந்தவர் சிலர். அவர் சொற்களை விரும்பிக் கேட்க வந்தவர் பலர். ஸத்ஸங்கத்தைத் தேடி வந்தவர் சிலர். ஒரே பக்தி! ஒரே சாந்தி! 'ஸத்து ஸத்து" "பேசாதீர்கள்' 'தயவு செய்து பெரியோர் சொற்களைக் கேளுங்கள்' என்ற பல்லவி பாட அவசியமே இல்லாமல் போயிற்று. அங்கு அருமையான சொற்பொழிவு! பக்தியில் தோய்ந்து ஊறிய அநுபவம் வாய்த்த பழுத்த பழங்கள் முழங்கிய ஸிம்ம நாதமே

---

உள்ளியாய் சம்பந்தர் அன்னை உதித்தநனி
பள்ளியாய் உன்னருளில் ஏழை பதிவேனே

ஸபையோரை அசைவற்ற பிம்பம்போல் செய்தது. ஸத்ஸங்க மருந்தைப் புசித்தவர் துராசார நோய்வாய்ப்படுவரா?

பக்தி ரஸத்தை உண்டார்கள்! இரு செவிகளாலும் உண்டார்கள்!! பசியாற உண்டார்கள்!!! இறைவன் ஸன்னதி! அடியார் கூட்டம்! தார்மிக மாபெருந் தலைவர்!! ஒரு சச்சரவிற்கு இடமுண்டோ? போலீஸுக்கு வேலை உண்டா? திருடு உண்டா? மூன்று மணிக்கு ஆரம்பித்த கூட்டம் ஒன்பது மணிக்கே முடிந்தது. தற்கால நாகரிகத்திலே படக் காக்ஷியில்கூட மூன்று மணிக்குமேல் உட்கார மாட்டார்கள். ஆறு மணி நேரம் கூட்டம் கலையாதிருந்தது ஸத்ஸங்கத்தின் மகிமையேயாகும்.

புறப்பட்டது இந்தர விமானத்திலே அருணகிரியின் உருவம்! கடல் அலை போல் பஜனை கோஷ்டிகள் கிளம்பிச் சென்றன. திருப்புகழைப் பாடிக் கேட்க விரும்பாதார் யார்? பல ஊர்களிலிருந்தும் வந்த கோஷ்டிகள் அருணகிரி க்ஷேத்ரத்தை அருணகிரி ஒலி மயமாகச் செய்துவிட்டன. நள்ளிரவிலும் திருக் கூட்டம் குறையவில்லை. பசி தாஹத்தை ஜயித்ததுபோல் தூக்கத்தையும் ஜயித்தனர்! முழு வைதிகமும் இதில் கலந்தது ஓர் தனிச் சிறப்பு!! அரு மருந்து செய்த வேலை மிக விசித்ரமானது! அஞ்ஞானிகளை பிரும்மாநந்தம் பெறும் நன்னாளாக்கியது ஸத்ஸங்கம்.

---

# பதினோராந்திருமுறை

## (சித்தாந்த பிரசங்காமிர்தம் பூ. சமரபுரி முதலியார்)

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. இவை தோத்திர வடிவங்களாக, சாத்திர மந்திர வடிவங்களாக, சரித்திர வடிவங்களாக உள்ளன. அவற்றுள் பதினோராந் திருமுறை ஆலவாயமர்ந்துறை சோமசுந்தரக் கடவுள் பாணபத்திரர் பொருட்டுத் திருவாய் மலர்ந்தருளிய திருமுகப் பாசுரம் முதலாக, நம்பியாண்டார் நம்பிகள் திருவாய் மலர்ந்தருளிய திருநாவுக்கரசு தேவர் திரு ஏகாதச மாலை

---

**வலம்புரியை மாற்கு வழங்குமது போல**
**வலம்புரனே நின்கடைக்கண் எற்கும் வழங்குதியோ**

ஈருக நாற்பது பிரபந்தங்களைக் கொண்டுள்ளது. இவை களை அருளிச் செய்தவர்கள் பன்னிருவர்.

அவர்களுள், கடைச் சங்கத்துத் தலைமைப் புலவராய் வீற்றிருந்து தோலா நாவினையுடையராய் விளங்கிய நக்கீரர் பெருமான் ஒருவராகும். அவர் அருளியன பத்தாகும்.

அவற்றுள் **"கோபப் பிரசாதம்"** என்பது ஒன்று. அந் நூல், இறைவன் அப்போதைக் கப்போது தன்னைச் சார்ந் தாருக்கு அறக்கருணை கொண்டு பிரசாதித்த அருளிச் செயல்களையும், தன்னைச் சாராதார்க்கு மறக் கருணை கொண்டு அவர்களைக் கோபித்து அருளிச் செய்த தண்டனை களையும் எடுத்து ஓதி, மக்களை இறைவனுடைய திருவடி களில் சரணடையுமாறு ஈடுபடுத்தி, சரணடையாதாரை இயமன் தண்டிப்பான் என்பதைக் கூறுமற் கூறிச்சிவபரத் துவம் நாட்டுவது.

அப் பிரபந்தத்துள் பல சரித்திரங்கள் குறிக்கப்பட் டுள்ளன. நல்லாசிரியர்களை அடுத்துக் கேட்ட அவைகளைப் பொதுவாக எல்லா மக்கட்கும், சிறப்பாகச் சைவ மக்கட் கும் பயன்படுமாறு, அவைகளுள் ஒன்றுபற்றி ஈண்டு எழுதத் திருவருள் முன்னின் றூக்க வரைகின்றனன்.

அது "நிதிபயில் குபேரற்கு நீள்நகர் ஈந்தும்" என்னும் 34-ம் அடியில் அமைந்துள்ள வாய்மை யாகும்.

குபேரன் வழக்கம்போல் ஒருநாள் சிவ தரிசனத்திற் குத் திருக்கயிலைக்குச் சென்றனன். அங்கு ஓடின ஓர் அணிலை அடித்துக் கொன்றான். ஈதறிந்த சிவனார் குபேரனை நோக்கி, அருளுக்கு உறைவிடமான இம் மலையில் வசிக்கும் அணிலைக் காரணம் ஒன்றும் இன்றி கொன்றா யானபடி யால் 'நீ பார்வை இழப்பாயாக' என்று சபித்தனர்.

அதனால் கண்ணிழந்த நிதிபதி பன்னாள் வருந்தி இறைவனை வழிபட அதற்கிரங்கிப் பார்வையை அளித் தனர்.

சின்னாள் கழிந்த பின், மீண்டும் தன்னிலை மறந்து இறைவனை இகழ்வானாயினன். ஆண்டவன் அவன்

---

**சங்காடு கண்ணற்குச் சதுரை யளித்த தலைச்**
**சங்காடு தங்கும் சங்கர நின் சார்புறுமோ**

கையை நறுக்கி, மீண்டும் பெற்ற பார்வையை இழக்கச் செய்தனர்.

துன்பத்தில் உழன்று அறிவுவர இறைவனைப் பல வாறுக வேண்டினன். இறைவனுர் கருணை கூர்ந்து, "நீ காசிக்குச் சென்று கங்கையில் நீராடி விஸ்வேசரை வழிபடு வாயானுல் ஒரு கண் பெறுவாய். அதனுல் ஒற்றைக் கண்ணன் (ஏகாட்சன்) என்னும் பெயர் பெறுவை" என்று அருளினர். அவ்வாறே காசிக்குச் சென்று கங்கையில் மூழ்கி விஸ்வேசரை வழிபட ஒரு கண் பெற்றனன்.

திருக்கயிலையை அடைந்து சிவனுர் மனங்குளிர பல வகையில் வழிபட்டு மற்றக் கண்ணும் கொடுத்தருள வேண்டும் என்று மிக்குக் குறையிரக்க, "நின்னை எல்லோரும் 'ஏகாட்சன்' என்று பரிகசிக்க, அதனுல், என்னை இகழ்ந்த பாவம் முழுதும் நீங்கி மற்றைய கண்ணும் பெறுவாய்" என்றருளினன் இறைவன். அதேபோல் எல்லோராலும் 'ஏகாட்சன்' என்று இகழப்பட, பாவம் முழுதும் நீங்கப்பெற்று, மற்றக் கண்ணும் பெற்ருன்.

மீண்டும் தன் அறுபட்ட கையைப் பெறுதற்கு இறைவனை பதினைந்து நாள் அன்புடன் வழிபட அக்கையும் வளரப் பெற்ருன்.

சிவபிரானது பேரருட்டிறனை உணர்ந்து அவரை வழிபட்டுத் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்ட காலை, ஆண்டவன் அவனுக்குத் தன் நட்பினையும், அளகாபுரிப் பட்டண ஆட்சியையும், தம் மருகிலேயே இருக்கும் அருளையும் வழங்கினர்.

இதனுல் தேவர்களே யாயினும் இறைவனை இகழ்வார் துன்பத்துக் காளாவார்; அவன் சரண் அடைந்து அன்போடு வழிபட்டார் நலமடைவர் என்பது பெற்ரும்.

---

**வாக்கூறும் அந்தணருள் ஒருவனென வந்ததிரு**
**ஆக்கூராய்! என்றனையும் அக்குழுவில் வையாயோ**

# அபேத வாதம்

(அ. ராமமூர்த்தி)

"பேதமற்ற சமுதாயம் வேண்டும். பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் அறவே இருக்கக் கூடாது. முதலாளி—தொழிலாளி, ஆண்டான்—அடிமை போன்ற வேறுபாடுகள் இருக்கக் கூடாது' என்ற 'முற்போக்கு' வாதம் அநேகமாக இன்று எங்கும் பேசப்படுகிறது. இம்மாதிரியான கொள்கையை சாதாரணமாக 'அபேத வாதம் (பொதுவுடமை) என்று சொல்லுகிறார்கள்.

பொது வுடைமையை சாத்திய மாக்குவதற்கான வழிகளைக் கூறும் அரசியல் கட்சிகளும் கட்சிப் பிரதி கட்சிகளும் இருக்கின்றன.

ஆனால் நான் கூறப் புகும் 'அபேத வாதம்' மேலே கண்டுள்ள அரசியல் பொதுவுடைமை யல்ல.

பேதங்கள் பல நிறைந்தது தான் உலகம். பேதமாக இருப்பதால் தான் அது உலகமாக இருக்கிறது. சமூகத்தின் அங்கத்தினர்களான மனிதர்கள் பல தரப்பட்டவர்கள். பல்வேறு மனோபாவங்களைக் கொண்டவர்கள்.

ஒவ்வொரு தனி மனிதனும் ஒரு 'தனி உலகம்' என்று கூறலாம். மனிதர்களின் அபிலாஷைகள், விருப்பு வெறுப்புகள், செயல் முறைகள் ஆகிய எல்லாம் பரஸ்பரம் வேறுபட்டவை யல்லவா?

அபேதமான (வேறுபாடற்ற) நிலை சாதாரண ஜீவர்களுக்குக் கிட்டாத ஒன்று. ஜீவன் முக்தர்களே உண்மையான அபேத வாதிகளாவர்.

'தான் வேறு. உலகம் வேறு' என்ற நினைவு உள்ள வரையில் ஒருவன் அபேத வாதியாக முடியாது.

சமூகத்தைத்தனக்குஅன்னியமாகப் பார்க்கும்எண்ணமுள்ளவர்கள் அபேத வாதிகளாக முடியாது.

"எல்லாம் பரம்பொருளின் ஸ்வரூபமே. அவனன்றி ஓரணுவும் அசையாது" என்ற திட நம்பிக்கையுள்ளவர்

---

**கடையூர் பிறவிபல கண்டுதுயர் கொண்டேன்
கடையூர் சிவனே நின் கடைக்கணருள் காணேனே**

களால் தான், சமூகத்தையும் உலகத்தையும் தனக்கு வேருகக் காண முடியாத உண்மைப் பண்பைக் கடைப்பிடிக்க முடியும். அவர்களே அபேத வாதிகள்.

பேத மற்ற நிலை—இரண்டற்ற நிலை—சகஜ நிலை—அபேத வாதம் இவ் வார்த்தைகள் யாவும் ஒரே பொருள் கொண்டவை.

தெய்வ நம்பிக்கை யுள்ளவன்—காண்பன யாவும் கடவுள் மயமே என்ற உண்மையை உணர்ந்தவன் எதையும் வேருகக் காண முடியாது.

ஜீவனின் தத்துவத்தை அறிந்தவன் தான் ஜீவனுக்காக இரங்க முடியும். தெய்வீக உணர்வு பெற்றவனுக்குத் தான் 'ஜீவ தத்துவம்' புரியும்.

பொருளாதார சமத்துவம் ஏற்படுவதால் மட்டும் ஜீவனுடைய பிரச்னைகள் தீர்ந்து விடுவதில்லை. அரசியல் சுதந்தரம் பெற்று விட்டதால் மட்டும் மனிதன் சுதந்திர புருஷனுகி விடுவதில்லை. "எல்லோரும் சமம்" என்ற உணர்வு மட்டும் போதாது. "எல்லாம் பேதமற்ற ஒரே பரம் பொருளின் தோற்றமே" என்ற உணர்வு வேண்டும்.

பரிபூரண வேதாந்தியே உண்மையான அபேதவாதி. அவனுல்தான் எல்லாவற்றையும் சமமாகக் காண முடியும். ஜீவர்களின் மனே தத்துவத்தை உணர்ந்து அவர்களுக்கு சரியான வழி காட்ட முடியும்.

பேதங்கள் நிறைந்த உலகத்தில்,பிரச்னைகளை என்றும் அபேதமாக்க முடியாது. தனி மனிதனுடைய மனம் பேத மற்ற சகஜ நிலையை அடைந்தால்தான் அபேத வாதம் தோன்ற முடியும்.

ஜீவனுடைய கஷ்டங்கள், பிரச்சினைகள் ஆகிய எல்லாம் மனத்தைப் பொறுத்ததுதான். மனத்தில் சமநிலை ஏற்பட்டாலன்றி, சகஜநிலை நிலவினு லன்றி அங்கு அபேத வாதம் தோன்ருது.

பொருளைப் பங்கிட்டு விடுவதாலோ, வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு விடுவதாலோ மனிதனுக்குத் திருப்தி ஏற்பட்டுவிட முடியாது.

---

**கடவூர் மறலிதனைக் கண்டுதைத்த வீரதிருக்**
**கடவூர் வருமிறைவன் கால்பிடித்து வாழ்வேனே**

"நம்முடைய பொருள் நம்முடைய உடைமை" என்ற எண்ணம் உள்ள வரையில் மனிதன் பிறருக்காக வாழ முடியாது. சுயநலத்தைத் துறக்க முடியாது.

"எதுவும் நமக்குச் சொந்தமல்ல" என்ற எண்ணம் பரிபூரண பிரம்ம ஞானிக்குத் தான் உண்டு. அவனே உண்மையான அபேத வாதி.

உலகத்தில் தேவைகள் என்றுமே பூர்த்தியடைவதில்லை. வேண்டும் என்ற எண்ணம் உள்ளவரை தேவைகள் இருக்கும்.

உணவு, உடை, இருப்பிடம் இம்மூன்றும் குறைவின்றிக் கிடைத்து விட்டாலும் மனிதன் திருப்தியடைந்துவிட மாட்டான். எப்பொழுதும் அவனுக்கு வேண்டியது ஏதாவது இருந்து கொண்டே யிருக்கும்.

உடைமை மனோபாவம் அறவே நீங்கும் பொழுது தான் மனிதனுக்குப் பூரண திருப்தி ஏற்பட முடியும்.

உடைமை மனோபாவம் உள்ளவரையில்மனிதனுக்குத் துன்பம் உண்டு. எனவே ஆசையை ஒழிக்க வேண்டும். ஆசையை வென்றவனே அபேத வாதியாவான்.

வேண்டும்—வேண்டாம் என்ற இரண்டுமே யின்றி, எல்லாம் 'அவன்' கொடுத்தது என்ற உணர்வுடன் கிடைத்ததைத் திருப்தியோடும் நேர்மையோடும் அனுபவிக்கும் பண்பு வாய்ந்தவனே உண்மையான அபேத வாதி. அவன் தன்னுடைய தேவைகளை மட்டுமல்ல. உலகத்தின் தேவைகளையே கூட சமாளிக்க முடியும்.

தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்பவனோ, அல்லது குறைந்த தேவைகளோடு திருப்தியடைபவனோ யார் தெரியுமா? **தேவைகளே அற்றவன் தான்.** அந்தத் '**தேவைகளே அற்ற**' மனோபாவம் தெய்வீக மனிதர்க்கே உண்டு. அவன் கூறும் சத்திய நெறியும் அருள் வாழ்க்கையுமே உண்மையான 'அபேத வாதம் ஆம்.

---

**வாட்டக் குடியாய் வாடாமல் நாயேன்**
**வேட்டக் குடியருளாம் விருந்துண்ண லென்றேயோ**

# பிறவியின் பயன்

(ஆ. கி. ரங்கராஜன்)

பிறவி எடுத்ததன் பயன் யாது? பிறக்காமலிருக்க வேண்டும் என்று நாம் நினைப்பது முடியாத காரியமாய் இருக்கிறது. பிறந்து இறந்துவிட்டால் நாம் என்ன ஆகிறோம் என்பதுபற்றி எதுவும் கூற இயலவில்லை. ஆனால் பிறந்து என்ன கண்டோம்?

இவ்விதம் மானிடன் ஆராய்ந்து கொண்டே இருக்கின்றான். "யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்." இதிலே என்ன இன்பத்தைக் கண்டான் மானிடன்? இதைவிட வேறு ஏதேனும் இன்பம் உளதோ? இவ்வாறு உண்பதிலும் உறங்குவதிலும் சிறிது அளவுக்குக் கூடவோ குறைத்தோ கையாண்டால் வியாதி, சஞ்சலம் முதலியவைகள் ஏற்பட்டு, அதனாலேயே விரைவில் அகால மரணமும் சம்பவிக்கிறது. இப்படியிருக்க, மானிடன் பிறவியினால் கண்ட பயன்தான் யாது?

பாழடைந்த இடம். அங்கொரு இடிந்த கோவில். சந்தடியற்ற வேளை. அவன் அந்த இடத்திற்குப் புதிது. அவன் அவ்விடத்தைச் சுற்றிப் பார்க்க விரும்பி அங்கு வருகிறான். உட்பிரகாரத்தில் பிரவேசித்து விட்டான். மனதில் அச்சம் ஏற்படுகிறது. அதோடு அவன் கண்முன் ஒரு தோற்றம். அது அவனை நடுங்கச் செய்கிறது. அப்படிப்பட்டதுதான் என்ன? நாய் ஒன்று படுத்துள்ளது. அது ஒரு வேட்டை நாய். அந்நாய் அவனைக் கண்டவுடனே வெறிக்கப் பார்க்கிறது. அதன் கண்ணில் தீப்பொறி பறக்கிறது. அவன்மீது பாயத் தயாராகிறது. அதன் கோரப் பற்கள் பார்க்க விகாரமாயும், பயங்கரமாயும், கூர்மையாகவும், வளைந்தும் இருக்கின்றன.

திகிலடைந்த அவன், தப்பி ஓடிவிட நினைக்கிறான். முடியவில்லை. ஏதாவது கல்லைப் பிளந்து அதன்மீது எறிந்து துரத்தலாமா? கொன்றுவிடலாமா என்று யோசித்துக்

---

தெளிச்சேறிவாக்கால்தெருட்டிபுத்தர்க் கன்றருள்செய்
தெளிச்சேரித் தேவநினை யான்தெளியும் நாளெதுவோ

கொண்டே சுற்றிலும் பார்க்கிறான். கல் எதுவும் கிடைக்க வில்லை. மீண்டும் நாயைப் பார்த்தான். நாயோ அவனையே நோக்கிய வண்ணமிருந்தது. அவன் மெதுவாக ஒவ்வொரு அடியும் எடுத்து வைத்தான். பயம் அதிகரித்தது. அருகில் செல்லும்வரை காத்திருந்து தன்மீது பாய்ந்துவிடுமோ?...

பு! இவ்வளவுதானா? அது உண்மையான நாயல்ல. கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. அப்பாடா! 'பட்பட்' என்று அடித்துக்கொண்டிருந்த அவன் இருதயம் சற்று ஆறுதல் அடைந்தது. அருகே சென்று அவ்வுருவத்தைச் செதுக்கிய சிற்பியையும் அவன் ஆற்றலையும் வியந்து கண்குளிரக் கண்டு ஆனந்திக்கிறான்.

பிறவி வேண்டும், பிறவி கூடாது என்று கூறுவதோ, அதைத் தடுப்பது, மறுப்பது, ஏற்பது போன்றவைகளோ நம்மால் உடனே முடியாத காரியமாம். மனிதப் பிறவி மிகவும் அரிது. ஆனால் வாழையடி வாழையாக வளரும் தன்மையும் உடையது. மானிடன் மயக்கமும் தெளிவும் மாறி மாறி அடைந்து, செய்யும்செயல்களின் விளைவுகளால் அவனது ஜனனங்கள் எண்ணற்றன வாகின்றன. அதனால் நலிவுற்ற அவன் இறைவனால் அருளப்பெற்ற பகுத்தறிவை சாதனமாகக் கொண்டு, இறைவனைப் பஜித்தலாகிய படகில் அமர்ந்து, பிறவி எனும் பயங்கர சாகரத்தைக் கடக்க வேண்டியவனாகிறான்.

இறைவனை சாதாரணமான வார்த்தைகளால் வேண்டின் முழுப் பலனும் கிடைக்காது. இறைவனைத் தன்னில் காணும்படியான ஞானநிலையை எய்துதல் வேண்டும். அப்போது உடற் சட்டைகளை அடிக்கடி மாட்டிக் கழற்றும் இடையூறுகளை விட்டு சுதந்திரனாகப் பிரகாசிக்கலாம். இதனாலேயே தாயுமானாரும்

> ஜெக மீதிருந்தாலும் மரணமுண் டென்பதை
> சதா நிஷ்டர் நினைவதில்லை

என்று கூறியுள்ளார்.

முன்சொன்னபடி நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம் என்றவாறு மனிதப் பிறவி எடுத்த எவர்க்கும் மயக்கம் ஏற்பட்ட

---

போது, பிறவியினால் அதிக துன்பமும் தெளிவும் ஏற்பட்ட போது, பிறவியினால் மகிழ்வும் உண்டாவது சகஜம். மயக்கம் நீங்கித் தெளிவு பெற்றபோது, மீண்டும் மயக்கத்தில் மருளாதபடி தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கே இறைவன் நமக்கு பகுத்தறிவாகிய நல்லறிவை வகுத்து அளித்திருக்கின்றான்.

"ஐவகை எனும் பூத மாதியை வகுத்(து), அதனுள்
அசர சர பேதமான
யாவையும் வகுத்து, நல்லறிவையும் வகுத்து,......"
—தாயுமானவர்.

நிற்க, இனிப் பிறவியின் பயன் என்ன என்பதை ஆராய்வோம்.

பலர் புகழும்படியான அதிசய வேலைகளை அறிந்து அதனைப் புரிந்துகொண்டிருத்தலே பிறவியின் பயன் என்று சிலர் கூறுவர். அபரிமிதமான திரவியத்தை அடைந்து அனைவரும் பணிசெய்ய, ஆனந்தமுறுதலே பிறவியின் பயன் என்று சிலர் கருதுவர். மிகுதியும் கற்றுணர்ந்ததாய் எண்ணும் வேறு சிலர், காயகல்பம் அருந்திக் காசினியில் அழியாது வாழ்தலே பிறவியின் பயன் என்று உரைப்பர். அவர்கள் அவ்வாறே செய்து, ஆசையின் சிகரத்தினின்று அழிவாகிய பாதாளப் படுகுழியில் வீழ்வர்.

உடம்பினைப்பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண் —ஔவை குறள்.

இனிப் பிறவாத தன்மையை எய்துதலும், இறைவனின் வடிவமாய்த் தான் இயங்குவதை அறிதலுமே பிறவியின் பயன் என்பதே ஞானிகள் கண்ட உண்மையாம். இதற்கு ஞானநிலையை அடைவதே முதற்படியாம். இதற்கு இடையூறாக எத்தனையோ தடைகள் உள்ளன. மிடியினால் மயக்கம், மயக்கத்தினால் ஆசை, ஆசையினால் பயம், பயத்தினால் துக்கம். இது போன்று அடுக்கடுக்காக அல்லல்கள் மானிடனைத் தத்தளிக்கச் செய்கின்றன. மனமென்றதோர் மாயையின் வசப்படும் மானிடன், அதை வென்றுவிட்டானாகில் அப்போதே பிறவியின் பயனை அடைகிறான்.

---

எள்ளாறு தீர்ந்துநளன் இன்பநலன் எய்தச்செய்
நள்ளாறன் தாள்நிழலில் நான்கலந்து நிற்பேனே

பெரியபுராணச் சித்திர விளக்கம் 30

# தாளம் பெற்ற ஞானக் குழந்தை

(கி. வா. ஜ.)

ஞான போனகம் உண்ட பெருமான் நேரே தோணி யப்பர் திருக்கோயில் சென்று வழிபடப் புக்கார். அப்போது அங்கே வந்தவர்கள் யாவரும் அங்கே நிகழ்ந்த அதிசயத்தைக் கேட்டு வியப்புக் கடலில் ஆழ்ந்து நின்றார்கள். இறைவன் திருவருளை யெண்ணி மனம் உருகினார்கள். மூன்று வயசுப் பிள்ளை அற்புதத் திருப் பாடல் பாடுவதைக் கேட்டுப் பிரமித்தார்கள்.

சம்பந்தர் தோணிபுரப் பெருமானைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடிப் போற்றினார். பின்பு திருக்கோயிலி னின்றும் வெளியே புறப்பட்டார். இதற்குள் ஊர் முழுவதும் இந்தச் சின்னஞ்சிறு பிள்ளை இறைவி வழங்கிய ஞானப் பாலை உண்டதும், திருப்பாடல் பாடுவதும் எங்கும் பரவின. மக்கள் திரளாகக் கோயிலின் முன் கூடிவிட்டார்கள். திருக்கோயிலி லிருந்து புறப்பட்ட ஆளுடைய பிள்ளையாரை எதிர்கொண்டு துதிக்கத் தொடங்கினார்கள்.

''சீகாழியில் வாழும் மக்கள் பண்ணிய தவப் பயனே, கவுணிய கோத்திரத்தினருக்குக் கிடைத்த அருஞ்செல்வமே, கலை ஞானம் நிரம்பிய கடலே, அக் கடலினிடம் தோன்றிய அமுதமே, இவ்வுலகில் அடியார் வாழ அவதாரம் செய்து எம்பெருமானுடைய அருளையும் அம்மையின் திருவருளையும் பெற்ற பெருமானே, மறைவளர் திருவே, வைதிக நிலையே, ஞானமென்னும் புனல் சுமக்கும் மேகமே, சீகாழியில் வந்தவர்கள் சரணாகதி அடையும் இடமே, பொன்னித் துறை பெற்ற மணியே, சுருதியின் ஒளியே, இறையவனும் உமையாளும் வெளிப்பட்டு அருள் தரப்பெற்றது என்ன வியப்பு!'' என்றும் பிறவாறும் பாராட்டிப் புகழ்ந்து பணிந்து வணங்கினார்கள்.

வாட்டாறு தீர்வெள்ளை யானை வழிபட்ட
கோட்டா றுடையானைக் கூடிமகிழ் கொள்வேனே

அப்போது பிள்ளையாருடன் வந்த தகப்பனாராகிய சிவபாத இருதயர் தம் குழந்தையை எடுத்துத் தோளின் மேல் வைத்துக் கொண்டு செல்லலானார். மக்கள் யாவரும் ஆனந்தத்தால் ஆரவாரம் செய்தார்கள். திருவீதியில் செல்லும் போது அங்கங்கே ஆலத்தி எடுத்தார்கள்; கற்பூர தீபம் காட்டினார்கள்; வாத்தியங்களை முழக்கினர்; வேத கோஷம் செய்தனர்; மணி விளக்கும் பூரணகும்பமும் வைத்து வரவேற்றார்கள். ஞானசம்பந்தர் தம்முடைய திருமாளிகைக்குட் சென்று இறைவன் திருவருளை எண்ணியபடியே இருந்தார்.

மறுநாட் காலையில் கதிரவன் உதயம் செய்தான். சம்பந்தர் தோணிபுரேசர் திருக்கோயில் சென்று இறைவனையும் அம்மையையும் வணங்கிக் கொண்டு அருகில் உள்ள திருக்கோலக்கா என்ற திருத்தலத்துக்குச் சென்று வழிபட்டுவரப் புறப்பட்டார். தொண்டர்கள் புடைசூழ இறைவனுடைய திருநாம ஒலி எங்கும் முழங்கத் திருக்கோலக்காவை அடைந்தார். திருக்கோயிலுள் புகுந்து இறைவனை வழிபட்டு, "மடையில் வாளை" என்ற திருப்பதிகத்தைப் பாடினார்.

அதனைப் பாடும்போது கையினால் தாளம் போட்டுக் கொண்டே பாடினார். அப்போது இறைவன் திருவருளால் ஞானசம்பந்தர் திருக்கரத்தில் செம்பொற்றாளம் வந்து அமைந்தது. அதில் இறைவனுடைய பஞ்சாட்சரம் பொறிக்கப் பெற்றிருந்தது. தம் கையில் தாளம் வந்ததைக் கண்டு, இறைவன் திருவருள் என்று வியந்து அதனைத் தலைமேல் வைத்துக்கொண்டு, அதைக்கொண்டு தாளம் போட்டுப் பாடத் தொடங்கினார். அந்தத் தாள ஒலி மிகவும் இனிதாய் அளவுகடவாததாய் இருந்தது கண்டு யாவரும் அதிசயித்தனர். அதுமுதல் தாளம் பெற்ற அத்தலம், அப்பால் திருத்தாளமுடையார் கோயில் என வழங்கப் பெற்றது. பின்பு ஞானப் பால் உண்ட பிள்ளையார் மீண்டும் சீகாழித் திருநகரம் வந்து சேர்ந்தார். அப்படி வந்தபோது அவரை அவர் தந்தையார் தம் திருத் தோளில் எடுத்துச் செல்லத்

---

**இம்பர் சோமாசி மாறர்க் கருளினையே**
**அம்பர் மாகாளா அடியனையும் ஆளாயோ**

தோணிபுரத் திருக்கோயில் வந்து இறைவனை வழிபட்டுப் பதிகம் பாடினார்.

நாளடைவில் ஞானமுண்ட பிள்ளையாரின் பெருமையும் ஆண்டவனது அருளதிசயமும் எங்கும் பரவின. வெளி ஊர்களிலிருந்து பலரும் வந்து வந்து அப்பெருமானைத் தரிசித்துப் போற்றி வணங்கிச் சென்றார்கள். சம்பந்தருடைய தாயார் பிறந்தது திருநனிபள்ளி என்ற ஊர். அவ்வூரில் உள்ளவர்கள் வந்து தம் ஊருக்கு வரவேண்டுமென்று அன்போடு அழைத்தார்கள். தந்தை குலமும் தாயின் குலமும் ஒருங்கே புகழ்பெற அவதரித்த பிள்ளையார் அல்லவா? பிள்ளையார் அதற்கு இசைந்தார்.

தாது அவிழ்ந்த செந்தாமரையின் அகவிதழைப் போன்ற இக் குழந்தையின் சிறிய அடிகள் பூமியின் நடக்கப்பொறாத சிவபாத இருதயர், பிறர் ஒருவர் தம் குழந்தையைத் தூக்கிச் செல்வதையும் பொறாத பேரன்பு உடையவராதலின், அவரைத் தம் திருத்தோளின் மேல் ஏற்றிக் கொண்டு நடந்தார். அந்தச் சின்னஞ்சிறு குழந்தைப் பிரானே சிவபிரான் திருவடியைத் தம் தலைமேலே வைத்த பாவனையுடன் சென்றார்.

திருநனிபள்ளியை அடைந்து அங்குள்ள உறவினரும் பிறரும் பாராட்டத் திருக்கோயிலை அடைந்தார். அங்கே உள்ள எம்பெருமானை வணங்கித் திருப்பதிகம் பாடினார். சில நாள் அவ்வூரில் தங்கி யிருந்தார்.

---

# அருணகிரியும் ஐம்பூதத்தலங்களும்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை B A B.T.)

*திருக்காளத்தி :*

இத்தலம் வாயுதலம். வாயுதேவன் பூசித்துப் பேறு பெற்றது என்பாருமுளர். இங்கு சுவாமி சன்னதியில்

---

**மாகாள மேனிமதன் மாய இந்த்ரன் வாழஅருள்**
**மாகாளா! என்மயக்கம் மாய அருள் தாராயோ.**

எரியும் விளக்குகளில் ஒன்று காற்றினால் வீசப்படுவது போல் என்றும் அசைந்த வண்ணமுள்ளது.

**தக்ஷிணகைலாயம் :**

ஒருகால் வாயுதேவனுக்கும் ஆதிசேடனுக்கும் தத்தம் வன்மையைக் காட்டுதற்கு ஒரு போட்டி வந்தது. அதாவது மேதகுமேருமலையை ஆதிசேடன் விடாப் பிடியாய்ப் பற்றிக் கொள்ள வேண்டும். வாயு தன் பலத்தால் அப் பிடியைத் தளர்த்திவிட வேண்டும் என்பதாம். இம் முறையில் இளைத்தவர் தோற்றவராக வேண்டும் எனப்பட்டது. மேருவைச் சேடனார் தம் வன்மையெலாங் கொண்டு பற்றிட, வாயுவும் பிரசண்ட சூறுவளியாகி அசைக்கத் தொடங்கவே, விண்ணவரும் மண்ணவரும் பெருங் குளிரால் வேதனையுற்று வருந்தினர். விண்ணவர் எல்லா உயிர்களின் நன்மை கருதிச் சேடனாரை விட்டுக் கொடுக்குமாறு பல்கால் வேண்டினர். சேடரும் தமக்குத் தோல்வியுறு மென்றும் எண்ணாமல் பிடியைச் சற்றுத் தளர்த்தினர். உடனே வாயுவானவர் மேருவின் சிகரங்களைகளைப் பறித்து வீசினர். அச்சிகரங்கள் மூன்றிடங்களில் வீழ்ந்தன. அவை தாம் **1. காளத்தி 2. திருசிராமலை 3. திருக்கோணமலை** (இலங்கையிலுள்ளது). இம் மூன்றும் தென் **கயிலாயம்** எனப்படும்.

> "முன்னர் வீழ்ந்திடு சிகரி **காளத்தி**பா மொழிவர்.
> பின்னர் வீழ்ந்தது **திருசிராமலை** எனும் பிறங்கல்
> அன்னதின் பிற கமைந்தது **கோணமா வசலம்**
> இன்ன மூன்றையும் "**தக்ஷிண கைலை**" என்றிசைப்பார்"
> (செவ்வந்தி புராணம்)

**முத்திதரும்தலம் :**

கமலை என்ற திருவாரூரில் பிறக்கவும், காசியில் இறக்கவும், சிதம்பரத்தில் தரிசிக்கவும், அருணைமாநகர் நினைக்கவும் முத்தி தருதல் போல்,காளத்தியும் மறவாது காதலால் நினைத்துத் துதிப்பார்க்கு முத்தி தருவதாகும்.

> "பிறந்தவர்க்கு ஆரூர் காணப் பெற்றவர் தமக்குத் தில்லை
> இறந்தவர் தமக்குக் காசி எவ்விடத்தேனும் நின்று

---

காயச்சூர்ப் பரிதிஒரு கரிமேல் வழிபட்ட
மீயச்சூர் எண்ணுறுமென் மேல்வினைகள் மேவுறுமோ

மறந்திலர் நினைத்தவர்க்கு வான்தொடும் அருணையாகும்
சிறந்திறை வீற்றிருக்கும் தெனுதுபொற் கயிலைக்குன்றே
(சீகாளத்தி புராணம்)

இதுபற்றியே இத்தலத்தினை முத்தித் தலங்கள் வரிசையில் வைத்து:

''தில்லை வனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம்—நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றம்மறைக் காடுஅருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்'

என்று சிவபோக சாரம் கூறுகிற்கும்.

**தலச் சிறப்பு :**

அகந்தைகொண்டு ஆழிமாயனை எள்ளி, ஞானக் குழந்தையான பிரகாலதனுக்குப் பல இடுக்கண் விளைத்த இரணியனைத் தூணுய், அதனூடு நரசிங்கமதாய் வந்து தோன்றி, அவனது உடலைப் பிளந்து குருதியைக் குடித்தார் நாரணமூர்த்தி. அசுரக் குருதி ஆதலால் திருமால் வெறிகொண்டு உலகை வருத்தினர். இதனைத் தேவர்கள் சிவனுருக்குக் கூறச் சிவனுர் வீரபத்திரரை அனுப்பினர். அவர் சரபம் என்ற சிம்புள் பறவையின் உருக்கொண்டு நரசிங்கத்தைக் கொத்திக் கிறித் தருக்கடக்கினர். அதன் தோலையும் முகத்தையும் சிவனுரணியத் தந்தனர். சிவனுர் அந்த நரசிங்கத் தோலை உடையாகவும், சிங்க முகத்தை வெண்டலை மேலும் அணிந்தனர்

"நரமடங்கல் வடிவனைத்தும் உரித்த சுற்றதனும் திருமுகமும் [முற்றும்
எடுத்தமலன் துலக்கவைமுன் சயவீரன் இலங்கிட வைத்தனனே"
(உபதேச காண்டம்)

அத்தகைய சிம்புளான வீரபத்திரர், தக்கன்யாகத்தில் சிவனுரை விலக்கிச் செய்யும் வேள்விக் குடந்தையா யிருந்த தேவர்கள் பலரைத் தண்டிக்கலாயினர். சந்திரனைக் காலடியில் வைத்துத் தேய்த்தருளினர். இந்திரனைத் தோள் நெரித்தனர்; தக்கன் தலையை அறுத்து வேள்வித்

---

**திலதையினுல் ராமன் தந்தைக்குத் தர்ப்பணம்செய்**
**திலதைப் பதியெண்ணித் தெளிவுற்ற தென்மனனே**

தீயிலிட்டனர். சூரியன் கண்களைப் பறித்துப் பற்களையும் உதிர்த்தனர், பிற தேவர்களையும் பற்பலவாறு தண்டம் செய்தனர்.

"சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன் தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள் நெரித்திட்டு எச்சன் தலையரிந்து
அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல் தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தார்ப் பொழில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய்"

(மணிவாசகம்)

அதில் சூரியன் சிவனார் உருவினன்.

"அருக்கன் ஆவான் அரன் உருவல்லனோ"

(அப்பர்)

ஆதலின் அவனைத் தடிந்ததினால் பாவம் சூழ்ந்தது. அதனை வீரபத்திரர் திருக்காளத்தியில் வழிபட்டுப் போக்கிக் கொண்டனர். இதனை நம் அருணகிரிப் பெருந்தகை,

"சிங்கம தாகத் திரிந்த மால் கெரு
வம் பொடி யாகப் பறந்து சீறிய
சிம்புள தாகச் சிறந்தகா என—வருகோமுன்
செங்கதி ரோனைக் கடிந்த தீவினை
துஞ்சிட வேநல் தவஞ்செய் தேறிய
தென் கயிலாயத் தமர்ந்து வாழ்வருள்—பெருமாளே".

(நரசிங்கராய்த் திரிந்த விஷ்ணு மூர்த்தியின் தருக்கினை ஒறுக்குமாறு பறந்து கோபித்த சிம்புட் பறவையாய் விளங்கி, 'ஆகா' என ஆரவாரித்து வந்த வீரபத்திரர் முன் தக்கன் செய் வேள்வியில் சூரியனை (பற்களுதிரத்) தண்டஞ் செய்த தீய பாவம் தீர, சிறந்த தவத்தினால் மேம்பட்ட தென் கயிலாயம் (காளத்தி) என்ற தலத்தில் எழுந்தருளி, அடியவர்கட்குப் பெருவாழ்வு உதவும் பெருமாளே!) என்று அழகுற அருளிச் செய்கிறார்.

"செம் பொன் பெயர் அசுரேசனை—உகிராலே
நந்தக் கொந்திச் சொரிகுடல் சோர்வற
நந்திக் கம்பத் தெழு நரகேசரி

---

பாம்பு வழிபட்டுப் பயனடைந்த பாம்புரத்தில்
ஆம்பேறு சார்ந்தடியேன் அருந்தவம்செய் நாளுறுமோ

நஞ்சக் குண்டைக் கொருவழி யேதென—மிகநாடி
வெஞ்ச சிம்புட் சொருபம தானவர்"

(திருவருணைத் திருப்புகழ்)

(பொன் பெயர் கொண்ட இரணியனெனும் அரக்கனை நகத்தால் அழியக் கிழித்து விழும் குடல் சரிய தூணில் தோன்றிய நரசிங்கரது தருக்கைச் சுருக்கும் வழியை மிகவும் நாடி, கொடிய சிம்புள் பறவையுருக் கொண்டவர்).

வீரபத்திரர் சிவாம்சராதலின் காஞ்சி புராணம் சரபமானார் சிவனாரே எனக் கூறியது:

"அஞ்சலீர் என்றளித் தனன் சிம்புளாய்
வஞ்ச மானிட வாளரி ஆயுளைத்
துஞ்சு வித்துரி கொண்டொளி தோற்றினன்
தஞ்ச மூண்டவர் தஞ்சர ணாயினன்"

"உண்ணப் புகுந்த பகன்ஒளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற" —(திருவாசகம்)

"பகன்தாமரைக் கண்கெடக் கடந்தோன்"

(திருக்கோவையார்)

"சூரியனார் தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற" —(மணிவாசகர்)

திருக்காளத்தித் தலம் மேற்குறித்தவற்றி லிருந்து தென் கயிலையாய் முத்தி தந்தருளுவது என்பதும், வழிபட்டோருடைய பாவத்தைப் பாற்ற வல்லது எனவும் அறிந்தோம். இத்தலம் ஞானமும் பொலிவும் அழகுமுடையது என்பதை,

"ஞானம் பொற்றிருக் காளத்திப் பதிவாழ் கந்தப்
—பெருமாளே"

என்ற திருப்புகழ் விளக்கும். இதில் ஞானம் உண்டு என்பதற்கு, ஞானச் சொரூபியாகிய ஞானப் பூங்கோதையம்மை பெண்ணலங்களனைத்தும் கொண்டு இயற்கை மணமுடைய ஞானக் குழலுடன் வீற்றிருத்தலே போதுமானது. இத் தலத்தில் பொன்னும் பொலிவுமுள என்பதனை, "பொன் முகரி"—(பொன்னின் ஒளி)—கொண்டு செல்லும் ஆறு ஓடுவதால் அறியலாம். இதன் பிறசிறப்பை அடுத்த இதழிற் காண்க. ★

---

**கருடனொடு செவ்வாய் கத்தருவர் பேறுபெற்று**
**வருகுடியாம் சிறுகுடியில் வந்துன்னைக் காண்பேனோ**

# பழனித் திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

ஞானங்கொள் பொறிகள்கூடி வானிந்து கதிரி லாத
நாடண்டி நமசி வாய வரையேறி-
நாவின்ப ரசம தான ஆநந்த அருவி பாய
நாதங்க ளொடுகு லாவி விளையாடி
ஊனங்கள் உயிர்கள் மோக நானென்ப தறிவி லாமல்
ஓமங்கி உருவ மாகி இருவோரும்
ஓரந்தம் மருவி ஞான மாவிஞ்சை முதுகின் ஏறி
லோகங்கள் வலம தாட அருள்தாராய்;
தேனங்கொள் இதழி தாகி தாரிந்து சலில வேணி
சீரங்கன் எனது தாதை ஒருமாது
சேர்பஞ்ச வடிவி மோகி யோகங்கள் மௌன ஜோதி
சேர்பங்கின் அமல நாதன் அருள்பாலா
கானங்கள் வரைகள் தீவு ஓதங்கள் பொடிய நீல
காடந்த மயிலில் ஏறும் முருகோனே!
காமன்கை மலர்கள்நாண வேடம்பெண் அமளி சேர்வை
காணெங்கள் பழநி மேவு பெருமாளே!

(தேனங்கொள்......பாலா)

(பதவுரை.) தேன் அம் கொள் இதழி - தேன் (துளிக்கும்) அழகிய கொன்றை மலர் மாலை; தாகி தார் - (தாதகி யெனப் பெறும்) ஆத்திமலர் மாலை; இந்து சலில வேணி சீர் அங்கன் - பிறைத் திங்கள், கங்கை, சடை (ஆகியவைகளை) சிறந்த அங்கங் களாகக் கொண்ட எனது அத்தர்;

ஒரு மாது - ஒப்பற்ற மேதகு அழகு மேனியள்; சேர் பஞ்ச வடிவி - ஒன்றுபட்ட ஐங்கிற சத்திகள் ஐவர் வடிவும் தானனவள்;

மோகி—(பெருங்) காதல்(சிவத்தின்பால்) பெற்றவள்; யோகம் கொள் மௌன ஜோதி சேர் பங்கின் அமல நாதன் அருள் பாலா - (முதிர்சிவ) யோகம் கைவல்யமான மோன நிலையில் பேரொளிப் பிழம்பாம் பெருமாட்டியார் (எனும் எனது அன்னையை,) இடப் பாகத்தில் வைத்த அனுதி மலமுத்த நாதரூப எம்பிரான் அருளிய இளம்பரிபூரணு!

---

காழியர்க்குப் பொற்காசு கனிந்தளித்த வாறெனக்கும்
வீழி மிழலையுளாய் விரும்பி யளிப்பாயோ

(கான்......முருகோனே)

கானங்கள் வரைகள் தீவு ஓதங்கள் பொடிய நீடு'காடு அந்த மயிலில் ஏறும் முருகோனே - காடுகள், (எண் திசை) மலைகள், (ஏழு) தீவுகள், (ஏழு) கடல்கள் எல்லாம் சிதைவுபட, (எழுகின்ற) நீல நிறம் மிக்க அழகிய மயில் மேல், (ஆண்மை தோன்ற) ஏறி நடத்தும் இன்ப வடிவ எம்மானே!

(காமன்...நாண...மேவு பெருமாளே)

காமன் கை மலர்கள் நாண - மன்மதன் கை மலர்க்கணைகள் (பெரிதும்) நாணம் கொண்டு பின்வாங்க;

வேடம் பெண் அமளி சேர்வை காண் - மறவர் குல திலக மகளான வள்ளியாரது (அநுபூதிப்) பள்ளியறையை (அனுதினமும்) கண்டு ஆனந்திக்கும்;

எங்கள் பழநி மேவு பெருமாளே - எங்கள் பழனிப் பதியில் இனிது எழுந்தருளியு பெருமையோனே!

(ஞான......அருள் தாராய்)

ஞானம் கொள் பொறிகள் கூடி - (மெய் வாய் கண் மூக்கு செவியெனும்) அறிகருவிகள் ஒரு முகமாகி;

வான் இந்து கதிர் இலாத நாடு அண்டி - விண்ணின் விளங்கும் மதி பரிதிகள் தோன்றாத (அரிய) திருநாட்டை அணுகி;

நமசிவாய வரை ஏறி - மலைபோல் பெருகி உயரும் ஐந்தெழுத்தின் ஓசைமேல், ஏற்றம் பெற உணர்வு எழும்பி;

நா இன்ப ரசமது ஆன ஆநந்த அருவி பாய - நாவிற்கு இனிய சாரமான இன்ப அருவி, (அம்மலையி லிருந்து பெருகிப்) பாய்ந்து வர;

நாதங்களொடு குலாவி விளையாடி - (அதனி லிருந்து பிறக்கும்) நாத நலத்தில் குதூகலம் விளையக் கூடியாடி;

ஊனங்கள் உயிர்கள் மோகம் நான் என்பது அறிவு இலாமல்—ஊனமான (பருமை, நுண்மை, குணம், தோல், காரணம் எனும் ஐந்து) உடல்கள், (ஈர்த்தல், விடுதலான) உயிர்ப்புகள் (எனும் இவைகளின் மேல் வாய்த்த) மோகத்தால், (அவைகளையே) நான் என்று மயங்கும்படி(தோன்றும்) அறிவு தோன்றாமல் தொலைய;

ஓம் அக்கி உருவம் ஆகி - ஓங்கார சித்கனல் சொருபமாகி;

---

வன்னியூர் வந்த வன்னிக் கருளலென
மன்னியூர் செய்யமுதம் மாந்த அருளுதியோ

இருவோரும் ஓர் அந்தம் மருவி - (நாம்) இருவரும் (வியாபக வியாப்பியம் என்னும்) ஒப்பற்ற முடிவில் (கனிந்து) இரண்டறக் கலந்து;

ஞான மா விஞ்சை முதுகில் ஏறி - ஞான வித்தையாம் (இன்பப்) பரிமேல் ஆரோகணித்து;

லோகங்கள் வலமது ஆட அருள்வாயே - எல்லா உலகையும் வலம் வரும்படி திருவருள் பாலிப்பீராக, (எ—று).

ஐந்தெழுந்து மேனியான்; ஐந்தக்கர தாண்டவன்; ஐந் தொழில் அத்தன் இவன் எனலை யறிவிக்கும் அடையாள மலர் மாலை, ஐந்து இதழ்க் கொன்றை. அதனுடன், ஆப்தனை அத்த னுக்கு, உயர்ந்த ஆத்தி மாலையும் உண்டு.

தா - குற்றம்; தகி - எரிப்பு; எனவே, மலகண்டனன் சிவன் எனலை அறிவிக்கின்ற மாலை அது. தாதகி என்பது, ஓசையின்பம் கருதி, தாகி என நின்றது.

மாபெரும் மதியாளன் எனலைக் குறிப்பிடுகின்றது, சிவத்தின் முடிமேல் உள்ள மெய்ஞ்ஞான மதி. அதனுடன், தக்கன் சாபத் தால் தளர்ந்த சந்திரன், என் அப்பா! என்னைக் கா! என்று, அடி யில் முடிபட அலறி விழுந்தான்.

என் காலில் விழுந்தாய்; தலையால் உன்னைத் தாங்குவேன்; வீணை கவலையை விடு என்று எடுத்து, வாழும்படி அவனைத் திரு முடியில் வைத்தனன் பரன். அந்த மதி இது எனவும் ஒருவகை.

ஏமாறுதே! உலக நிலையாமையை உணர்ந்து இரு!

'மாதத்திற்கு ஒரு திங்கள் உண்டாகி
மறைவதனை, உன்
போதத்திலே வைத்துப் புரிந்திலையே
புன்மை நெஞ்சே !'

என்ற உபதேசமும், அம் மதிமுகமாகி மலர்வது காண் கிறோம்.

கங்கா எனும் வடசொல், வேகம் என்று பொருள்படும். பள்ளம் கண்டு விரையும் அதன் வேகம், அமலன் திருமுடியில் அடங்கியுளது; எம்மானை எண்ணினால், அடங்கா நம் முனைப்பு அடங்கும் என்பது, இங்கு நமக்குள் அறிவிப்பு. பாவத்தைக் கழு

---

பெருவிலிமன் சற்குணர்க்குப் பிறவிப் பிணிதீர்த்த
கருவிலியூ ராயென்றன் கருவகற்றிக் காவாயோ

வும் பயனுன அத் தீர்த்தம், தளர்ந்த ஆன்ம தாபம் தணிக்கும் என்பதை, உலகம் என்றும் உணர்ந்துளது.

பற்றற்றவன் பரன் என்பதை, ஆன்மா உணர உணர்த்துகின்றது சடைத் தொகுதி.

கொன்றை, ஆத்தி, மதி, கங்கை, சடை எனப் பெறும் ஐந்தும் அமல சிவத்திற்கே உரிய அங்கங்கள்; ஆதலின், 'சீர் அங்கன்' என்று உணர்ந்து சிறக்க உரைத்தபடி.

எனது தாதை என்பது, உரிமை தோன்ற உணர்ந்த நிலை. கலைமகளையும் திருமகளையும் கண்களாகக் கொண்ட மலைமகளை, **ஒருமாது** என்பதை உன்னும்போதே உள்ளம் உருகுகிறதே!

பசுமை நிறம், நீல நிறம், வெண்ணிறம், செந்நிறம், பொன்னிறம் கொண்டவர்கள், இச்சை, கிரியை, ஞானம், ஆதி, பரையெனும் பஞ்ச சத்திகள். '**பிங்கலை நீலி செய்யாள் வெளியாள் பசும் பெண் கொடியே**' என்பது அபிராமி அந்தாதி.

மற்று, ஐந்நிறங் கண்ட ஐம்பூத வடிவி எனலும் ஒரு வகை.

'**வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே**' எனவும் ஆழ்ந்துரைக்கின்றது அந்த அந்தாதி.

கண்ணுதலைக் காதலித்து, ஆன்மாக்கட்கு விமலன் மேல் வேட்கை விளைவிக்கும் விமலையை, **மோகி** என்கிருர்.

பேசும் நிலையில் பெருமைத் திரு மேனியள்; பேசா நிலையில், பேரொளிப் பிழம்பாம் பேரருள் வடிவி; ஆதலின், **யோகம் கொள்** மௌன ஜோதி' என்றார்.

இனிய இத்தேவிக்கு என்றும் இடப்புறம் தந்தவன், அமல நாதன். இப்பெயர்கள், காமம் கடந்தோன்; களங்க ரகிதன் எனும் பொருளை, கம்பீரம் தோன்றக் காட்டுகின்றன அல்லவா!

ஆக்கமான அன்னையும், ஆட்சியான அத்தனும் அருள் **பாலா** என்னும் பகுதியை, ஓதி உள்ளம் உருகார் உளரோ?

அசுர உணர்வால், அகிலமெலாம் பாழும் நீசத்வம் படர்ந்தது; அந்நிலை கெட, ஹுங்கார மயிலேறும் ஓங்காரனை, **முருகோனே** என்ற அருமையை ஊன்றி எண்ணி உணர்வது நலம்.

வீணுன தாகம் விளைய, கணைகளை ஏவுபவன் காமன்.

வள்ளி இதயாம்புயம் அன்ன வதனாம்புய என்பது கந்தரந்தாதி. இதன்படி வள்ளியும் வள்ளலும், உள்ளாழ்ந்திய ஒருமை நிலையினர். அந்தக்கரண அந்தப்புரத்தில், அவர்தம்

---

அருந்துறைகள் ஒன்றறியேன் அருட்சத்தி பூசித்த
பெருந்துறையான் திருவடிக்கீழ் பேதைக்குப் பேறுமமோ

சந்திப்பு உற்சவம் சால நடைபெறும். அவைகளை உணர்ந்த காமன் கணைகள், செல்ல இயலாமையை எண்ணி நாணின என்றார்.

சிவத்தின்பால் தோல்வி கண்ட காமன் அம்புகள், நம்பன் குமரனிடமும் நாணின என்பது குறிப்பு. ஞானதனத்தி வள்ளி யம்மை; ஞான பண்டிதன் பழனியான்; ஆனபோது, ஏது காமத் திற்கு இடம்? எம்மானை அழுந்த எண்ணி யிருந்தால், காமன் புறம் காண்பன் என அன்பினர்க்கும் நுண்மை அறிவிப்பு இது.

கையொன்று செய்ய, விழியொன்று நாடக்,
கருத்தொன் றெண்ணப்,
பொய்யொன்று வஞ்சக நாவொன்று
பேசப், புலால் கமழும்
மெய்யொன்று சாரச், செவியொன்று
கேட்க, விரும்புமியான்
செய்கின்ற பூசை யெவ்வாறு
கொள்வாய்; வினை தீர்த்தவனே!

என்கிறார் பட்டினத்தடிகள். இங்ஙனம் இடர் அடையாதபடி, 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள' இருந்தது சுந்தரர் அனுபவம்.

சரியை கிரியையில் முழுமை யிருந்தால், உணர்வில் ஒருமை உதயமாம். அந்நிலையில், இவ்வுலக மதி பரிதிகளின் ஒளி மறையும். மேதகு உணர்வு மேலேறும். சுத்த மாயையின் ஆட்சியான, தேரின்பம் நல்கும் திருநாடு தோன்றும். அந்நாட்டில் உணர்வு அமைதி பெறும். பிறர் செவிக்குக் கேட்கும் அளவில், உரிய ஐந் தெழுத்து அங்கு ஓதப்பெறும். வானளாவி அவ்வோசை வளரும். வியாபிக்கும் அவ்வோசை, பரவிப் பரவி ஓதுவார் செவியிலும் வந்து பாயும். அதைச் சிரவணிக்கும் வேட்கையில், அருமை உதடுகள் லேசாக அசையும்: அந்த அளவில் அம்மனு ஓதப்பெறும். ஓசை, நயமான ஒலியாகும். ஒலிநயம் உணர்ந்தபின், இதய அளவாக அம்மந்திரம் எண்ணப் பெறும்.

ஓசையும் ஒலியும், மலைபோல் வானளாவி வளரும். பயனுள அம்மலை மேல் உணர்வு படர்ந்தேறும். மேலேற ஏற, " நான்

பெருநறையூர் திரைகளொடு பித்துறமூப் பெய்துமுனே
திருநறையூர்ப் பெம்மான் திருவார்ந்து நிற்பேனே

மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்றபடி, நாவூறல் நடைபெறும்.

நமசிவாய மலையி லிருந்து, அரிய இன்பரச அருவி, நாவில் சுரந்து, படர்ந்து எழுந்து, அகமும் புறமும் பாயும்.

" இன்பரசத் தேபருகிப் பலகாலும்,
என் றன் உயிர்க்கு ஆதரவுற்று அருள்வாயே"

என்ற திருப்புகழ் இங்கு எண்ணத் தகும்.

நம எனும் எழுத்திரண்டும் மெல்லோசை.
சி எனும் எழுத்து வல்லோசை.
வாய எனும் எழுத்திரண்டும் இடையோசை.

ஸப்த ஸ்வரத்தில் எழும் ஸ ப ஸ போல், ஐந்தெழுத்தில் இருந்து, வலி மெலி இடையாய் எழும் இன்ப நாதம். அதனில் ஊன்றிக் குதூகல உறவுகொண்டு, வித்தகமாகி ஆன்மா விளையாடும்.

அதன்பின், தேகமே நான்; பிராணனே நான் என்று மயக்கியிருந்த அறிவு மடியும். அந்நிலையில், ஆன்மா தங்கியுள்ள ஆக்கை ஓங்கார ஞானக் கனலாகும். உடனே ஓர்தலுக்குரிய குஹன் சந்திப்பு கைகூடும். இதை அந்தரங்க சேவை யென்று அறிவிப்பர் மேலோர். இதுதான் அத்வைத சித்தி.

" நாதமும் கடந்த நிலையிலே நீயும்
நானுமாய் நிற்கும்நாள் உளதோ ?"
அந்தரங்க சேவை செய்ய வெண்ணிலாவே—எங்கள்
அண்ணல் வருவாரோ சொல்லாய் வெண்ணிலாவே."
காவலை யெல்லாம் கடந்தே பாங்கிமாரே—எந்தன்
கன்னியழித்தே ஒளித்தார் பாங்கிமாரே"

என்று, இந்நுட்பத்தை நயமுற உணர்த்துகின்றார் நல்லோர்.

அமல நாதன் அருள் பாலா! முருகோனே! பெருமாளே! உமது வியாபகத்தில் வியாப்பியமான அடியேன், ஞானப்பரியேறி, உன்போல் உலகை யெல்லாம் ஒரு நொடியில் உலவிவர உதவியருள் என்பது, இத்திருப்புகழின் முற்பகுதியில் போந்த பொருள். இதை மேலும் விரித்தால், கடல்போல் பெருகும்; தொகுத்துக் குறித்த இவைகளை, ஊன்றி அன்பர்கள் உணர வேண்டுகிறோம்.

வாழ்க திருப்புகழ் !
வளர்க அனுபவம் !!

---

**பவபுரத்தைக் கண்டதன்றி வராகர் பயனடைந்த
சிவபுரத்தை நாயடியேன் சேவிக்கச் செய்யாயோ**

# திருவண்ணாமலை
# திரு அருணகிரிநாதர் திருவிழா

எங்கும் குதூகலம். ஆம். ஆகஸ்ட் 15-ஆம் நாளான சுதந்தர தினத்தன்று, வைகறை வேளையில், இதோ திருப்பரங்குன்றம்! இதோ திருச்செந்தூர்! இதோ இருக்கிறது பழனி! ஆம் ஆம். அதோ திருவேரகம்! இதோ இதோ குன்றுதோருடல்! பார் பார் அதோ பழமுதிர்சோலை! என்று, அப்பெயர் தாங்கிய ஆறு பஸ்களில், அதற்கான சின்னம் தரித்த அடியார்கள் ஏறினர்; அவர்களுடைய ஆர்வமும், வைதிக சின்னமும், ஹரஹர முழக்கமும், கண்டும் கேட்டும் உள்ளம் பாகாய் உருகியது; சரியாக 5½ மணிக்குப் புறப்பட்டு, செல்லும் வழியெல்லாம் ஹரஹர கோஷம் செய்தனர்.

காலை 7 மணிக்குமேல் சிங்கப்பெருமாள் கோயிலில் குகஸ்ரீ ரசபதி தேசீயக் கொடி ஏற்றினர். காலைச் சிற்றுண்டியை அளித்து, அடியார்களை ஆர்வங் கொண்டு உபசரித்த பக்தர் திரு ராஜாமணி ஐயர் அவர்கள் அன்பை எண்ண நெகிழ்கிறது இதயம்.

அதன் பின் புறப்பட்ட பக்தர்கள் திருமயிலம் சேர்ந்து, பஜனை கோஷத்துடன், அப்பா! அத்தா!! முருகா!!! அருள் என்று சிறக்கப் பிரார்த்தனை செய்தனர். மயிலம் மடாதிபதி ஸ்ரீ பாலைய ஸ்வாமிகள், அனைவரையும் ஆசி செய்து உபசரித்த அருமையே அருமை.

உடனே முருக குமர குகா! என்று பெருங் குரல் கொடுத்துப் பிரார்த்தித்தபடி, பக்தர்கள் புறப்பட்டு அருணையை அடைந்தனர். அவர்கட்குமுன் வெளியூரிலிருந்து அருணை சேர்ந்த பக்தர்கள், அன்று காலை முதல் அண்ணாமலையில் முழக்கிய தமிழ் வேதத் திருப்புகழ் நாதம், அப்பதியின் புனித நிலையைப் புலப்படுத்தி யிருந்தது. அதன்மேல் மகேஸ்வர பூஜை.

பகல் 2 மணிக்குமேல், ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகள் செய்த அருமையான பஜனையுடன், திருப்புகழ் மாநாடு ஆரம்பித்தது. மாபெரும் பக்த மணிகளான திருப்புகழ்மணி, ஸ்ரீவத்ஸ சோமதேவ சர்மா, இளவழகனார், கி. வா. ஜ., ஆனந்த விகடன் ஆசிரியர் ஸ்ரீ மகாதேவய்யர், ஸ்ரீ ராமானுஜாசார்ய ஸ்வாமிகள், ரசபதி, நெல்லை ஸ்ரீ சிவகாமசுந்தரியம்மையார், ஸ்ரீ காஞ்சனமாலை

---

**மலைய வினைமலங்கள் மயங்கியுடல் சாயுமுனே**
**கலையநல்லூர் காட்டியெனை கண்களிக்கச் செய்யாயோ**

யம்மை முதலிய பலர், 6 மணி நேரம் வரை செய்த ஆஸ்திக விரிவுரை என்றும் மறக்க முடிவது இல்லை.

அமர்ந்து சிரவணித்த பல்லாயிரக் கணக்கான பக்தர்கள், ஆடாமல் அசையாமல் இருந்து சிரவணித்த அருமையை எண்ணும் போதே இன்பம் சிலிர்க்கிறது.

இரவு 10 மணிக்குமேல் வீதி பாராயணம். ஸ்ரீ வேதாசலம் செட்டியார், ஸ்ரீ சபாபதி செட்டியாருடன் வந்த சென்னை அருணகிரிநாதர் பக்தஜனசபை; சென்னை அமராவதி காவலன் திருப்புகழ் சபை, ஸ்ரீ தியாகராஜய்யருடன் வந்த மதுரை ஆடி வீதி திருப்புகழ் சபை மூன்றும் பயிற்றியிருந்த பல குழந்தைகள் செய்த பஜனை, கர்ணாமிர்தமாக இருந்தது. இடையிடை திருப்புகழ் விளக்க விரிவுரை நிகழ்த்தினர் ஸ்ரீ தியாகராஜையர். மற்றொருபால் ஸ்ரீ முருகதாஸ் அவர்களின் பாட்டும் விரிவுரையும் பாராட்டத் தக்கபடியிருந்தது.

ஸ்ரீ சிவம், ஸ்ரீ கணேசன், ஸ்ரீமதி ரமணியம்மாளுடன் வந்த பெங்களூர் திருப்புகழ் சபைகளும், திருநெல்வேலி தொண்டர் நாயனார் திருப்புகழ் சபை, ஸ்ரீ குமரகுருபரன் பிள்ளை உதவியால் வந்த ஸ்ரீ வைகுண்டம் திருப்புகழ் சபை, திருச்செந்தூர் திருப்புகழ் சபை, காஞ்சி குமரகோட்டம் திருப்புகழ் சபை, அல்லிவரம் கார்த்திகேயன் பக்தஜன சபை, மயிலை வார வழிபாட்டு சக்கம், சென்னை கந்தகோட்ட ஓதுவார்கள சபை, சென்னை மாதர்கள் திருக்கூட்டம், இறைபணி மன்றம் ஞாயிறு அடியார் திருக்கூட்டங்களால், மாடவீதிகள் எங்கும் பஜனைமயம். இப்படி திருப்புகழ், அலங்காரம், அனுபூதி, வகுப்பு, பிள்ளைத் தமிழ் முதலிய நாதமயமாக இருந்தது அருணகிரிநாதர் விழா. பலவூர்களில் இருந்து வந்த பல ஆயிர பக்தர்கள், அருணகிரிநாதர் திருவிழாவைக் கண்டும், பஜனைகளைக் கேட்டும் காட்டிய பக்திப் பெருக்கம், இனி இந்த அருமையை, அடுத்த 15-ஆம் தேதியில் அல்லவா காணப் போகிறோம் என்று காட்டிய பரிவை எண்ணும்போதே உயர்ந்து எழும்புகிறது நம் உள்ளம்.

ஆறுபடை வீடுகளி லிருந்தும், ஐம்பூதத் தலங்களி லிருந்தும், கிராமங்களில் இருந்தும், எத்தனையோ ஆயிரவர் திரண்டு வழிபட நேர்ந்த இத் திருப்பணிக்கு மூலகாரணர் பலர்.

திருவண்ணாமலை ஸ்ரீ ஈசான்ய மடம் ஸ்வாமிகள், ஸ்ரீ முத்தைய செட்டியார், ஸ்ரீ தான்மல் சவுக்கார், கோயில் அதிகாரிகள் முதலிய திருவிழாக் குழுவினர் 24 பேர்.

---

**கருக்குடியில் உள்ளனை நீ கண்கலங்க வேண்டாங்காண்**
**கருக்குடியில் தங்கியுளன் காப்பளிக்க என்பாயோ**

ஸ்ரீகோடி அப்பு செட்டியார்: புரசை ஸ்ரீ பி. வி. ராவ், மங்களா கேப் அதிபர் ஸ்ரீசம்பந்த முதலியார், ஸ்ரீராஜா நாயகர், ஸ்ரீ வேணு கோபால் நாயுடு, ஸ்ரீ சீனிவாசன், ஸ்ரீ சுந்தரம் முதலிய பக்தர்கள் பலர், அரிசி, மற்ற சாமக்ரியைகள், வெண்பொன் முதலியன வேண்டுமளவு விரும்பி உதவினர். சிரமம் பாராமல் இரவும் பகலும் இடையறாது பாடுபட்ட பக்தர்களும் பலர்.

பலவகையில் இத்திருப்பணியில் பங்கு கொண்ட யாவர்க்கும், இறைபணி மன்ற ஞாயிறு அடியார் திருக்கூட்டம் நன்றி செலுத்துகின்றது.

வாழ்க பக்தர்கள்! வாழ்க திருவண்ணுமலை!
வாழ்க திருப்புகழ் சபைகள்! வாழ்க சுதந்திர நாள்!!

## மதிப்புரை

**ஆனந்தத் தேன்** **விலை ரூ. 2—0—0**

ஆசிரியர் :
**கி. வா. ஜகந்நாதையர்**

அருணகிரிநாதர் பாடிய கந்தரலங்காரத்துள், இது மூன்றாவது படிமம். முன் வந்த இரண்டு பகுதிகளைப் போல், இதனிலும் ஆறு பாடல் விரிவுரை அமைந்துளது. பெயர்க்கு ஏற்ப இந்நூல் முழுவதும் ஆனந்தமான அனுபவங்கள், தேன் போல் இனிக்கும் செய்திகள், விறுவிறு என்று பிரவகிக்கும் வெள்ளம் போல் விளங்குகின்றன. வள்ளிகோன் உபதேசம், மூவகைச் சுட்டு, எதிர்மறைத் துதி, மூன்றிடம் முதலிய பல வேத நுட்பங்களை வெளியிடுகின்றது. சும்மா இருக்கும் எல்லைப் பகுதி, சும்மா இராதே! படி! என்னைப் படியென்று மென்மேலும் படிக்கத் தூண்டுகின்றது. ஊன்றி மயிலின் வீரத்தை உணரும் பொழுது, நாமே மயிலாகி விடுவது போன்ற உணர்வு எவர்க்கும் உண்டாகும். நாத தத்துவம், சேவல் பதாகையில் நடமிடுகின்றது. கிங்கிணி ஓசை, தேவர் பயத்தை மட்டுமல்ல; நம்பன் முருகனை நம்பிய நமக்கு ஒருநாளும் அச்சம் இல்லை என்ற உணர்வை உதவுகின்றது. ஆஸ்திகப் பெருமக்கள், பயனுள இத்தகைய செய்தி பல கொண்ட இந்நூலை வாங்கி ஓதிப் பயனடைய வேண்டுகிறோம்.

கிடைக்குமிடம் :
அமுதநிலையம், தேனாம்பேட்டை, சென்னை—18.

281

# ஆக்க நோக்கம்

## (வா. ராமலிங்கம் பிள்ளை)

'ஆக்கம்' என்ற சொல்லுக்கு ஒருவர் தனது உடைமையாகப் பெற்றுள்ள கல்வி, செல்வம், மாடு, மனை முதலியனவற்றில் முன்னைய நிலையிலிருந்து மேலும் நிறைவு பெற்று ஓங்குதல் என்பது பொருளாகும். இவ்விதம் தன் நிலையில் மேலோங்கும் ஒருவரைக் கண்டு தரணியோர், 'அவனது நிலையில் ஆக்கம் பொங்குகிறது' எனக் கூறக் காண்கிறோம்.

அவ்வித ஆக்கத்திற்கு அமைந்த காரணமாக வாழ்க்கையில் வந்து பொருந்தும் சிலவற்றையும் கூறுவதுண்டு.

ஒருவருக்கு நல்ல வேளையில் ஒரு குழந்தை பிறந்தாலும், அல்லது மணவினை நடந்து ஒரு நங்கை வீடு புகுந்தது கொண்டும், மகவு பிறந்த நேரம், அல்லது மனைவி கைப்பிடித்த நேரம், அல்லது அவள் கால் எடுத்து வந்து வீடு புகுந்த நேரம் ஆக்கம் மிக்கது எனச் சொல்லுவது வழக்கம். அம்மட்டல்ல; சிலர், மாடு மனை வகையரு வாங்கியதைக் கூட கூடுதலான ஆக்கத்துக்கு உற்ற காரணமாகவும் கொள்வது உண்டு.

'ஆக்கம்' என்ற வார்த்தையின் பொருளமைவு சிறப்பு இயல்பைத் தெரிவிப்பதேயாம் என்பதை, வித்துவான் ஒருவர் ஒரு அரச அவையை நண்ணியபோது, அவ்வரசன் அது சமயம் காகம் கரைவது கண்டு அதன் குறிப்பென்ன என்று வித்துவானை வினவ, அவர் கூறியதாக வுள்ள கீழ்க்காணும் பழம் பாடலாலும் விளங்கும்.

'வாக்கா வடிவழகா வுயர்வால ராமேந்த்ரா!
ஆக்கமுள்ள புயத்தாய் அணிமிகுத்திடு காத்தாய்

வாக்குநன்மை வருதென்று வளருந் தென்னைமரத்தில்
காக்காவெனும் கூகூவெனும் கீக்கீயெனும் காக்கை.

இதனில் அரசன் புஜபல பராக்கிரமன் என்பதை "ஆக்கமுள்ள புயத்தாய்" எனக் குறித்தமை காணலாம். திருவள்ளுவரும்,

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை"

எனக் குறித்தமையும் நன்கு கருதற்பாலதாம். அன்றியும், எந்த நற்கருமம் தொடங்கும் போதும் அதன்ஆக்கங் கருதி, முதற்கண் மஞ்சளும் பாக்கும் மாண்புடையார் கைப்பட வாங்கி வந்து, மங்கல மங்கையர் கையால் மண் பானையில் சேர்ப்பது நந்தமிழ் நாட்டில் முந்தையோர் செய்து வந்த ஆக்க முறையாம். இன்னும் இது எங்கணும் நிகழ்வது காணலாம் என்பது அனுபவ அமைவாம்.

சிலர் பால் ஷெ நிகழ்ச்சியின் காரணமாக முன்பு இருந்த நிலையில் தாழ்வு நேர்வதும் உண்டு. அப்பொழுது மகவு பிறந்த ஆக்கம், அல்லது மனைவி புகுந்த ஆக்கம் நாளுக்கு நாள் நலிவுதான் என இகழ்ந்து உரைப்பதும் உண்டு. இங்கே "ஆக்கம்" என்ற வார்த்தை இழிவு சிறப்பாக உரைக்கப் பெறும்.

இனி இத்தகைய ஆக்கம், அதாவது தன் நிலைமையில் தழைத் தோங்கும் தன்மையை இரண்டு விதமாகக் கொள்ளலாம். ஒன்று பொருளாக்கம். மற்றொன்று அருளாக்கம் என்பதாம். பொருளாக்கம் என்பது உலக போக நிலையை உயர்த்துவது. அருளாக்கம் என்பது உயிரின் உயர்வுக்குத் தொடர்பாய அயர்விலா மயலறு செயலை உயர்த்தி உயர்வு தருவது. இம்மைக்குப் பொருளாக்கமும் அம்மைக்கு அருளாக்கமும் வேண்டப் பெறும்.

---

**எந்நிலமும் ஏத்தும் எம்பெருமான் இவ்வுலக**
**நன்னிலத்தின் உள்ளான் நங்குறைகள் தீர்ந்தனவே**

"பொருளிலார்க் கிவ்வுலக மில்லை அருளிலார்க்கு
அவ்வுலக மில்லாகி யாங்கு"

என்றார் வள்ளுவப் பெருந்தகையார்.

எனவே எவரும் இவ்விரு ஆக்கங்களும் பொருந்தவே விரும்புவது வேண்டும். பொருளாக்கம் கருதுங்கால் அதன் ஈட்டத்திற்காக பொய்ம்மையில் புகுதவும் நேர்வ துண்டு.

"மாட்டைத்தேடி மகிழ்ந்து நீர் நம்முளே
நாட்டுப் பொய்யெல்லாம் பேசிடும் நாணிலீர்"

என்ற அப்பர் சுவாமிகள் வாக்கு இதனை விளக்குவதாம்.

அருளாக்கத் துறையில் அதற்கிடமில்லை. அன்றியும் அருளாக்க நாட்டமே பொருளாக்கத்தையும் பொருந்தச் செய்து, பின்னர் கழித்து ஈடேற்றும் கவினுடையதாம்.

'பொன்னுமெய்ப் பொருளும் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானை'

என்றனர் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

வேண்டிய போகமது வேண்டிய போதடியர்
வேண்டவெ ருதுதவு—பெருமாளே.

என்றார் அருணகிரிநாத சுவாமிகள்.

இனி அருளாக்க நாட்டத்தினாலே அறிவு விளக்க மாம். தெளிவும் நிகழும் என்பதை

"பூரி யாவரும் புண்ணியம் பொய்கெடும்
கூரிதாய அறிவுகை கூடிடும்"

என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் உரையாலும் தெரிய லாம்.

இவ்விதம் பொருளாக்கம், அருளாக்கம் என்பன விரும்பி, அதில் முயற்சிகள் எழும் மன எழுச்சியே "நோக்கம்" என்பதாம். "நோக்கம்" பார்வை என்பது தான்

---

பண்பனைத்தும் உருவாம் பராசர்க் கருள்புரிந்த
தண்பனையூர்த் தம்பிரான் தண்மையெனை எண்ணுறுமோ.

பொருள் என்பதல்ல. ஒன்றைச் செய்ய உந்தியெழும் மன உணர்ச்சியே "நோக்கம் ஆகும். பார்வை என்ற பொருளில் வருவது நோக்கம் என்ற வார்த்தையே.

'ஒரு நோக்கு நோய் நோய்க்கு மற்றொரு நோக்கு அந் நோய்க்கு மருந்து' என்ற குறளால் இது விளங்கும்.

சாதாரணமாக நம்மிடம் ஒருவர் ஏதேனும் காரியமாக வந்தால், அவர் வரும் குறிப்பால் இன்னவர் இன்ன நோக்கத்தோடு வருகிறார் என்பதைத் தெரிவது அல்லது சொல்வது வழக்கத்தில் காண்கிறோம். அவ்விதமே ஒருவர் ஒன்றைச் செய்யும் பொழுது, அச் செயலில் மனம் பற்றிய தன்மை குறைந்து உள்ளம் வேறாகி நின்றால் அப்பொழுது அன்னார் நோக்கமே வேறாயினர் எனச் சொல்லுகிறோம். இந்த நோக்கம் என்ற உள்ள நெகிழ்ச்சி நன்றிற் பொருந்துவதுபோல தீயதிலும் பொருந்துவதுண்டு. அப்பொழுது அவர் நோக்கமே கபடமானது, அல்லது வஞ்சகமானது எனவும் குறிப்பிடுகிறோம். எப்படியும் நோக்கம் என்பது ஒரு செயலைக் குறித்து எழும் உள்ள நெகிழ்ச்சியாம் உணர்ச்சி என்பது தெளிவு.

யாவரும் நல்லனவற்றையே நாடுவதும் நாடவேண்டுவதும் இன்றியமையாத இனிய பண்பு. ஒவ்வொருவரும் பொருளாலும் அருளாலும் "ஆக்கம்" பெறுவதையே நோக்கமாக கொண்டு முற்படவேண்டும். இதுவே "ஆக்க நோக்கம்" என்பது. இத்தகைய "ஆக்க நோக்கம்" ஒருவரின் தனிப்பட்ட தன்மையில், வினையும் பயனிலும் நலமே நாடும் நற்கூட்டத்தால் நிகழ்வதில் பயன் அதிகமாம். இத்தகைய பயனைப் பெற்றுய்யுமாறு,

"ஓடாமல் பாழுக் குழையாமல் ஓரம் உரைப்பவர்பால்
கூடாமல் **நல்லவர் கூட்டம் விடாமல்**" எனவும்,

---

**எற்குமேல் இல்லையெனும் சலந்தரனை யீடழித்த**
**விற்குடியான் ஆணவத்தின் வீறழிப்பன் நிச்சயமே**

நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ"

எனப் பட்டினத்தடிகளும்,

மேவினோம் அவனடியா ரடியாரோடும்
மென்மேலும் குடைந்தாடி யாடுவோமே"

என ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகளும் கூறியருளினமை குறித்துணரற்பாலதாம்.

இக்காலம் இத்தகைய ஆக்க நோக்கமாகிய அருள் நாட்டம் மிகுவதற்கு கூட்டுறவு முறையிலே "சென்னை இறை பணி மன்றத்தினர்" திருத்தல வழிபாடு, திருப்புகழ் விருப் பால் பேணி விழாக்களும் நடத்தி வருவது பெரும் பயன் தருவதாகும். 15-8-56-ல் திருவண்ணுமலையில் ஷெ மன்றத் தார் நடத்திய அருணகிரிநாதர் விழாச் சிறப்பில் கலந்து கண்டு களித்தார் யாரும், இவ்வரிய பணியின் பயனை இனி துணர்வார்.

நல்லவர் கூட்டுறவால் ஆக்க நோக்கங் கொண்டு ஆடிப் பாடிப் பணிந்தபோது, இறைவனின் ஆக்க நோக்கமாகிய அருள் திருநோக்கு நம்பால் திகழ்வதாகும். எம்பிரான்,

"வான் பழித்திம் மண் புகுந்து மனிதரை ஆட்கொள் ளும் வள்ளல்" அல்லவா!

"அவனேதானே ஆகிய அந்நெறி, ஏக னுகி இறைபணி நிற்க, மலமாயை தன்னொடு வல்வினை இன்றே" என்று சிவ ஞான போதம், கடவுள் வழிபாட்டால் எய்தப்பெறும் இணையிலா இன்பத்தைக் கூறுகிறது. இரண்டறக் கலத்தல் என்ற ஏற்றமிகு பெற்றியை நமது அருணகிரிநாத சுவாமி களும்,

நீவே றெனுதிருக்க; நான்வே றெனுதிருக்க
நேராக வாழ்வதற்குன்—அருள்கூர; எனவும்,

---

அன்புகலந் தேத்தும் அருந்தவர்முன் இன்றுமுறும்
தென்புகலூர்த் தேநோக்கில் தேயும்முன் சஞ்சிதமே

நினை வணங்கு பத்த ரனைவருந் தழைக்க
நெறியில் நின்ற வெற்றி—முனைவேலா

எனவும் கூறியருளினர்.

இத்தகைய அருள் கூட்டம் திருவண்ணாமலையிலே கூடும்படி ஷை மன்றத்தினர் அமைத்தது பெரிதும் பொருத்த முடையதாகும். ஏனென்றால் அவனே நாடி வந்த ருள் செய்யும் நம்பன்.

'தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வார்
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போகும் நமக்குள்ள வினைகளே''

என்பது அப்பர் சுவாமிகள் அருள் வாக்காகும்.

எனவே தக்கார் பொருளாக்கத்தை அருளாக்கத்திற் பொருந்தச் செய்து, ஆன்ம இருளகற்றி மேன்மை ஒளி பெருக்க உதவுவது இத்தகைய பெருவிழா என்பது இறை பணி ஆக்க நோக்கமே யன்றி வேறென்ன?

எல்லாரும் இத்தகைய ஆக்க நோக்கத் துறையின் ஊக்கமுடையவர்களாகி ஓங்குதற்கு எல்லாம் வல்ல பரம் பொருள் இன்னருள் புரிவதாக.

''அவனு லின்னும் பெறுதும் நாம் ஆக்க நோக்கம், பேரதி கரணத்தாலே'' என்பது சிவஞானசித்தியார்.

---

அர்த்தமா வேதம் அன்றுதொடர்ந் தேத்தும்
வர்த்தமா னேச்சுரத்தை வாழ்த்துமதி வந்துறுமோ?

# " WHY AM I BORN"

Many people put this question to themselves and others. Few are able to give a satisfactory answer. Professor Einstein said this: 'Man is here for the sake of other men. Many times a day I realise how much my own outer and inner life is built upon the labours of my fellowmen, both living and dead; and how earnestly I must exert myself in order to give in return as much as I have received.' If Professor Einstein himself felt the pinch of gratitude, how much more grateful should ordinary men be, and how much more they should strive to pass on and improve the great knowledge that generations have accumulated for our benefit.

Men live for long years, but such men have not lived necessarily their best, if they had lived at all. For, great men "live in deeds, not years; in thoughts, not breaths; in feelings, not in figures on the dial." "We should count time by the heart-throbs. "He lives most who thinks most, feels the noblest and acts the best." Every man must place '*service above self.*' *Sacrifice* is the one thing by which God created the Universe and it is by *sacrifice* alone that man can ever attain to the prize of life. The Upanishads declare that

there is nothing in the world of reality that is good or worth having that has not been wrought by sacrifice. Sacrifice must be to God. All lives are the tabernacles of God. Hence serve man to serve God. As the wise saying goes "if wealth is lost, nothing is lost; if health is lost, half is lost, if God and His thought be lost, all is lost."

—*Thiruppugal Mani.*

341

ஆதியே அரசே அமரர்கள் கோவே
    அமிர்தமே ஆருயிர்த் துணையே
நீதியே ஞான நின்மலப் பொருளே
    ஞேயமே யெறிதிரை சூழும்
மேதினி படைத்த மெய்ப்பரஞ் சுடரே
    மெய்யர்தம் உளத்தவி(சு) அமரும்
சோதியே சிவமே சிற்பர வெளியே!
    தொண்டனைக் காப்பதுன் கடனே!!

18586

No:1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஸ்ரீவிசீ
நெ.1506
1506

Regd. M. No. 5390, Amirthavachani (1956 புரட்டாசி—அமிர்தவசனி)

— 312 —


# Coffee
## Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

## சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd :—1924. Phone :—113


## அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி | 1 | 0 | 0 |
| ,, 6 திருவகுப்புகள் | 1 | 8 | 0 |
| ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் | 2 | 0 | 0 |
| ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 1 | 8 | 0 |
| திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள் | 0 | 6 | 0 |
| திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்) | 0 | 12 | 0 |
| கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன் | 1 | 0 | 0 |
| தேவி தாஸர்கள் (அச்சில்) | | | |
| கணபதி பக்தர்கள் ,, | | | |
| முருகனடியார் ,, | | | |

**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1**

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18